# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

சரியான விடையை தெரிவு செய்க.

1.பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை………… **நுண்ணியல் மற்றும் பேரியல்**

2.மேக்ரோ என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார் ? **ராக்னர் பிரிக்ஸ்**

3.நவீன பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ? **ஜே.எம்.கீன்ஸ்.**

4.பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது ? **வருவாய் கோட்பாடு.**

5.பேரியல் பொருளாதாரம் என்பது ……… பற்றிய படிப்பு. **மொத்தங்கள்.**

6.ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக. **பொது கோட்பாடு.**

7.பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து…… **பண வீக்கம்.**

8.பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக……. **மேலே கூறப்பட்ட அனைத்தும்.**

9.ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கையை குறிப்பிடுக. **உற்பத்தி மற்றும் நுகர்வு.**

10.ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது……… **மேலே கூறப்பட்ட அனைத்தும்.**

11.எந்த பொருளாதார அமைப்பில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ? **முதலாளித்துவ அமைப்பு.**

12.பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கின்ற பொருளாதார அமைப்பு---------- ஆகும் **சமத்துவ பொருளாதார அமைப்பு.**

13.முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார் ? **ஆடம்ஸ்மித்.**

14.முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு------- ஆகும். **அமெரிக்கா**

15.சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி---------------- **காரல் மார்க்ஸ்.**

16.தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம்------------------ ஆகும். **கலப்பு பொருளாதாரம்.**

17.ஒரு குறிப்பிட்ட காலத்தில் குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம்-------- ஆகும். **இருப்பு.**

18.கீழ்கண்டவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி-------- **வருவாய்.**

19.இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக. **குடும்பங்களும் நிறுவனங்களும்.**

20.திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது---------ஆகும். **நான்கு துறை மாதிரி**

21.உற்பத்திக்காரணியின் செலவின் அடிப்படையிலான NNP---------- **தேசிய வருவாய்**

22.முதன்மைதுறை என்பது ---------- **விவசாயம்.**

23.எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது ? **மூன்று**

24.எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது ? **வருமானம்**

25.கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும் ? GNP

26.------------- துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது ? **கட்டடத்துறை**

27.மூன்றாம் துறை -------------எனவும் அழைக்கப்படுகிறது ? **பணிகள்**

28.ஒரு நாட்டின் ---------------செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது. **பொருளாதாரம்**

29.---------------ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம். **நாட்டின் மக்கள் தொகை.**

30.GNP = ---------- + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம் **GDP**

31 .NNP என்பது ------------**Net National Product**.

32.மொத்த மதிப்பிலிருந்து ------------ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும். ? **தேய்மானம்**

33.இந்தியாவில் நிதி ஆண்டு என்பது -------- **ஏப்ரல் 1 முதல் மார்ச் 31**

34.NNP யிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ------------------- **நிகர தேசிய உற்பத்தி.**

35.உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு --------- என அழைக்கப்படுகிறது. **காரணி செலவில் NNP**

36.ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது-------- **தலைவீத வருமானம்**

A.Alexis.DBHSS.V.Pet

37.பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ---------- என அழைக்கப்படுகிறது **உண்மை தேசிய வருமானம்.**

38.கீழ்கண்டவற்றுள் எது ஒட்ட கருத்துரு ? **மாத வருமானம்**

40.மிக அதிக அளவிலான தேசிய வருவாய் --------லிருந்து வருகிறது. **தனியார் துறை**

41. நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ---------- எனப்படும். **முழுவேலைவாய்ப்பு.**

42.அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு------------- **இயங்கும் சமுதாயம்.**

43.மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி ------- **பூஜ்ஜியம்.**

44.தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு ---------- **பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்.**

45.ஜே.பி.சே ஒரு -------------- **தொன்மை பொருளியலாளர்.**

46.கீன்ஸின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை கானப்படுகிறது ? **குறைவு வேலைவாய்ப்பு**

47.வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது---------- **அங்காடி விதி**

48.கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ----------- **விளைவு தேவை பற்றாக்குறை.**

49.சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது------------- நெகிழ்வு ஆகும். **வட்டியின்**

50.நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில்--------------- கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. **கீன்ஸ்**

51.வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படை கருத்துரு-------- ஆகும். **விளைவுத் தேவை**

52.தொகுத் தேவையின் கூறு------------------ஆகும். **அரசுச் செலவு**

53.மொத்த அளிப்பு சமம்----------------- C+S+T+Rf

54.தலையிடா கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு ----------ஐ எடுத்துரைக்கிறது **சில சூழல்களில் அரசின் செயல்பாடு.**

55.கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில் -------------பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக உள்ளது. **உற்பத்தி திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்த தேவை**

56.தொன்மைக் கோட்பாடு என்பது ---------ஐ ஆதரிக்கிறது. **சமநிலை வரவு செலவு.**

57.------------------- சமநிலையை கீன்ஸின் கோட்பாடு வலியுறுத்துகிறது. **குறுகிய காலம்.**

58.தொன்மைக் கோட்பாட்டின்படி வட்டி வீதம் ----------------க்கான வெகுமதி. **சேமிப்பு.**

59.கீன்ஸின் கோட்பாட்டில் பணவீக்கத்திற்கான தேவையையும் அளிப்பையும் நிர்ணயிப்பது------- ஆகும். **வட்டி வீதம்.**

60.ஒரு பொருளாதாரத்தில் ---------- இயக்கத்தில் சேயின் விதி வலியுறுத்தியது. **தானியங்கும் விலைக் கருவி.**

61.சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது ..................... **C/Y**

62.இறுதி நிலை நுகர்வு நாட்டம் கூடினால்............... **நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கி செல்லும்.**

63.கீன்ஸின் நுகர்வுச் சார்பு C=10+0.8 ஆக இருந்து செலவிடக் கூடிய வருவாய் ரூ.1000 ஆக இருந்தால் நுகர்வு எவ்வளவு ? **ரூ.810.**

64.கீன்ஸின் நுகவுச் சார்பு C=10+0.8Y ஆக இருந்து செலவிடக் கூடிய வருவாய் ரூ.100 ஆக இருந்தால் இறுதி நிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு ? **ரூ.0.8**

65.கீன்ஸின் நுகர்வுச் சார்பு C=10+0.8Y ஆக இருந்து செலவிடக் கூடிய வருவாய் ரூ.100 ஆக இருந்தால் சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு ? **ரூ.0.9**

66.தேசிய வருவாய் உயரும் போது **APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கி விடும்.**

67.ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில் நுகர்வு அதிகரித்தால் -------------- **மொத்த தேவை உயரும்.**

A.Alexis.DBHSS.V.Pet

68.குறைவான வட்டி வீதம் ———————— **கடனையும் செலவையும் அதிகரிக்கும்.**

69.இறுதி நிலை நுகர்வு விருப்பு = **நுகர்வு மாற்றம் /வருவாய் மாற்றம்.**

70.மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு ———————— **நுகர்வு சார்பு.**

71.MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது ———————— **1.**

72.வருவாய் உயர்ந்தால் நுகர்வு ———————— **உயரும்.**

73.முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால் AD யின் சாய்வை நிர்ணயிப்பது———————— **இறுதி நிலை நுகர்வு நாட்டம்.**

74.———————— இடம் பெயர்ந்த பின்னர்———————— எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது. **மொத்த தேவை , வெளியிடு.**

75.பெருக்கியின் மதிப்பு ———— **அ மற்றும் ஆ )அல்லது**

76. MPC=0.5 எனில் பெருக்கியின் மதிப்பு———————— **2**

77.ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் இறக்குமதி பெருக்கியின் மதிப்பை **குறைக்கிறது.**

78.கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MPC ஐயும் ———————— சார்ந்தது. **வட்டி வீதத்தையும்.**

79.மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்———— **J.R.ஹிக்ஸ்.**

80. MPC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்? **J.M.கீன்ஸ்.**

81.ஆர்பிஐ–யின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ———————— **மும்பை**

82.பணம் என்பது ———————— **உள்ளவற்றில் அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்.**

83.காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது ..................... **மைய பணவியல் அமைப்பு.**

84.M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்———————— **அஞ்சல் அலுவலக வைப்புகள்.**

85.இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு———————— **1911.**

86.MV என்பது ———————— **சட்ட பூர்வ பண அளிப்பு.**

87.பணவீக்கம் என்பது ———————— **விலைகள் அதிகரிப்பு.**

88..................... பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது. **உயர்**

89.கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது ———————— பணவீக்கம் ஆகும். **செலவு உந்து**

90.பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர் யார்? **கடன் பெற்றோர்கள்**

91.......................... என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வத ஆகும். **எதிர் பணவீக்கம்**

92.தேக்கவீகத்தில் பணவீக்க வீதத்துடன் இணைந்திருப்பது.................. **தேக்கம்**

93.பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ———————— அழைக்கிறோம். **வணிகச்சுழற்சி.**

94.மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும். **மிக குறைந்தபட்சமாக**

95."பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக்கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர்———— **கிரௌதர்.**

96.பற்று அட்டை என்பது———————— உதாரணம் ஆகும். **நெகிழி பணம்**

97.ஃபிஷரின் பண அளவு கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. **பரிவர்த்தனை கருவி**

98.MV=PT என்ற சமன்பாட்டில் V என்பது———————— **பணத்தின் சுழற்சி வேகம்**

99.விலைவாசி மெதுவாக உயரும் அது அழைக்கப்படுவது———————— **மிதமான பணவீக்கம்**

100.———————— பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது. **தவழும்**

101.ஒரு வங்கி என்பது ———————— **நிதி நிறுவனம்**

102.ஒரு வணிக வங்கி செய்யும் சேவை ———————— **அ மற்றும் ஆ**

103.வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு **மேற்சொன்ன அனைத்தும்.**

104.வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது? **கடன் பணம் மற்றும் முன்பணம்**

105.கடன் உருவாக்கம் என்பதன் பொருள்........ **கடன் மற்றும் முன்பண பெருக்கம்**

A.Alexis.DBHS.V.Pet

106.வங்கியல்லா நிறுவனங்கள் ------------ அதிகார அமைப்பு **பணவியல்**

107.மைய வங்கி நாட்டின் --------------- **அதிகார அமைப்பு பணவியல்**

108.வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது ----------- **இந்திய ரிசர்வ் வங்கி**

109.கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது **மைய வங்கி**

110.வங்கி விகிதம் என்பது ------------ முதல்நிலை பத்திரங்களை மறுதள்ளுபடி செய்வது

111.ரெப்கோ விகிதம் என்பதன் பொருள் --------------- ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் **கடனுக்கான வட்டி விகிதம்**

112.நெறிமுறை தூண்டல் என்பது -------------- **தூண்டுதல் நடவடிக்கை**

113.விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது ------------ **ஜீலை 1, 1963.**

114.நபார்டு வங்கி எப்போழுது ஆரம்பிக்கப்பட்டது ? **ஜீலை 1982.**

115.ஏற்றுமதி–இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது ? **மார்ச் 1982**

116.மாநில நிதிக் கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது ? **இந்திய அரசு**

117.பணவியல் கொள்கையை வடிவமைப்பது ? **மைய வங்கி**

118.நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்பட்டது ? **இணைய வங்கி**

119.ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன ? **தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்.**

120.2016 ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது ? **ரூ500 மற்றும் ரூ1000.**

121.இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ---------------- **வெளிவாணிகம்.**

123.கீழ்கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது ? **மேற்கண்ட அனைத்தும்**

124.பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம் **மேற்கண்ட அனைத்தும்**

125.நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படை காரணம் **உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.**

126.கீழ்கண்டவைகளில் பன்னாட்டு வாணிகத்தின் நன்மை எது ? **மக்கள் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது.**

127.பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை **அந்நிய செலாவணி**

128. கீழ்கண்ட எந்த பணமாற்று நிர்ணயமுறையில் சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கிறது ? **மாறுகின்ற பண மாற்று வீதம்.**

A.Alexis.DBHSS.V.Pet

129.ஏற்றுமதி நிகரம் என்பது **ஏற்றுமதி – இறக்குமதி.**

130.கீழ்கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர் ? **ஜேக்கப் வைனர்.**

131.வாணிப வீதம் ------------- பற்றி குறிப்பிடுகின்றது ? **ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்.**

132.சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட ------------ ஆக இருக்கும். **அதிகமாக**

133.இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும் ? **ஏற்றுமதி வரியை அதிகரித்தல்**

134.அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள் **அ மற்றும் ஆ**

135.அயல்நாட்டுச் செலுத்துநிலை கூறுகள் கீழ்கண்டவைகளில் எவை ? **அ , ஆ ,இ, மூன்றும்**

136.வாணிப கொடுப்பல் நிலை அறிக்கையில் **பொருள் பரிவர்த்தனை மட்டும் பதிவாகிறது.**

137.சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்துநிலையின் எந்த கணக்கின் கீழ் பதிவாகிறது ? **பணிகள் வாணிக கணக்கு**

138.சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமற்ற நிலைக்கான காரணம் **அ மற்றும் ஆ**

139.கீழ்கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது ? **வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது**

140.இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ? **அணு ஆற்றல்**

141. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன **மேற்கண்ட அனைத்தும்**

142. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது
**பிரிட்டன் உட்ஸ் மாநாடு**

142. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் **வாஷிடங்டன் டி.சி**

143. ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது. **உலக வங்கி**

144. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் **தாள் தங்கம்**

145. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம் **உலக வங்கி**

146. கீழ்கண்ட நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை ? **ஜப்பான்**

147. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்கண்ட இதன் துணை அமைப்பாகும் **உலக வங்கி**

148. காப்புரிமை , பதிப்புரிமை , வாணிக ரகசியம் போன்றவை ...........உடன் தொடர்புடையவை
**வணிகம் சார் சொத்துரிமை**

149. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்
**சிங்கப்பூர்**

150. ஆசியான் கூட்டங்கள்............... ஆண்டுகளுக்கு ஒரு முறை நடை பெறும். **3**

151. கீழ்கண்டவைகளில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல ? **சீனா**

152. சார்க் உச்சி மாநாடு .....................ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறுகிறது. **2**

153. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் **ஜகார்த்தா**

154. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு **2001**

155. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு **1967**

156. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ல் நடைபெற்ற இடம் **ஜோகனஸ் பர்க்**

157. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது. **பிரிக்ஸ்**

158. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு **வடகொரியா**

159. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு **1998**

160. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும். **சுங்கவரி ஒன்றியம்**

161. நவீன அரசு எனப்படுவது **நலம் பேணும் அரசு**

162. கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது **விளம்பரப்படுத்துதல்**

163. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது **மேல் கூறப்பட்ட அனைத்தும்**

164. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது ? **எளிமை விதி**

165. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க **ii மட்டும்**

166. GST இதற்கு சமம் ? **விற்பனை வரி**

167. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை **வசதி**

168. கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி ? **வருமான வரி**

169. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை ? **விவசாய வருமான வரி**

170. அரசின் வருவாய் வரவு ( Revenue Receipts) கணக்கில் சேராதது **சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்**

171. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயை விட (Revenue receipts) அதிகமாக இருந்தால் , அது **வருவாய் பற்றாக்குறை**

172. மொத்தச் செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால் , அது
**முதன்மை பற்றாக்குறை**

173. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது **பொருளாதார முன்னேற்றம்**

174. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது
**அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயை விட அதிகம்**

175. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை **இவை அனைத்தும்**

176. பொதுக்கடனை மாற்றுதல் என்பது **மேற்கூறிய அனைத்தும்**

177. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரெஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்
**சிறிய பை**

A.Alexis.DBHSS.V.Pet

178. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும் ?
**முதன்மைப் பற்றாக்குறை**

179. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது ? **நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்**

180. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி
(i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது
(ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
**இரண்டும்**

181. என்வைரான்மென்ட் (Environment) என்ற வார்த்தை ————————என்ற பொருள் கொள்ளும் எந்த பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது ? **என்வைரோனியா**

182. “ உயிர்சார்” (biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன ? **உயிர் வாழ்வன**

183. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி ? **பையொஸ்பியர்**

184. “ பொருள்சார் சமநிலை அணுகு முறையை ” நிறுவியவர் யார் ?
**ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பர்லின்**

185. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ……………………….. ? **சந்தைப் பொருட்கள்**

186. தூய பொதுப் பொருட்களில், நுகர்ச்சி என்பது………………………… . **போட்டி உடையது**

187. சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் —————— ஆகும். **எதிர்மறை புற விளைவுகள்**

188. வெளிக் காற்று மாசுவுக்கு ————————— காரணமாகும். **மோட்டார் வாகனங்கள்**

189. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது **மோட்டார் வாகனங்கள்**

190. பின்வரும் எது உலக வெப்ப மயமாதலுக்கு காரணம் ? **வெப்ப நிலை அதிகமாதல்.**

191. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது ? **ஓசோன் படலம்**

192. உலக வெப்பமயமாதல் ———————— என்றும் குறிப்பிடப்படுகிறது. **பருவநிலை மாறுபாடு**

193. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு ?
**கடல் மட்டம் உயர்தல்**

194. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது ? **யூட்ரோபிகேசன்**

195. மண் மாசுவிற்கு முதல்நிலை காரணம் ————————. **இரசாயன உரங்கள்**

196. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது ? **மரம் வெட்டும் தொழில்**

197. மின்னணு கழிவுகள் ———————— என்ற பொதுவாக குறிப்பிடப்படுகின்றன . **இ—கழிவுகள்**

198. அமிலமழை —————————— விளைவுகளில் ஒன்று. **காற்று மாசு**

199. நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் ————— . **2030**

200. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது ? **மேற்கூறிய அனைத்தும்**

201. “ வளர்ச்சியுடன் கூடிய மறுபகிர்வு“ கீழ்கண்ட எந்த அனுகுமுறையின் புகழ்பெற்ற முழக்கம் இது.
**புதிய பொது நல அணுகுமுறை**

202. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எது ? **விரிவான கருத்து**

203. கீழ்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும் **வறுமையின் நச்சு சுழற்சி**

204. கீழ்கண்டவற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது
**மனித வளங்கள்.**

205. பொருளாதார வளர்ச்சி ……………….. ஐ அளவிடுகிறது **உற்பத்தி அதிகரிப்பு**

206. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியின்படி ஏழை நாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால் **அ மற்றும் ஆ**

207. கீழ்கண்ட எந்த திட்டத்தில், வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது ?
**காந்தியத் திட்டம்**

208. கீழ்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்

A.Alexis.DBHSS,Pdt

i) மக்கள் திட்டம் ii) பாம்பே திட்டம்
iii) ஜவஹர்லால் நேரு திட்டம் iv) விஸ்வேசுவரய்யா திட்டம்

**ஆ) iv) iii) ii) i)**

209. எம். என் ராய் வழங்கியத் திட்டம் கீழ்கண்டவைகளில் எது ? **மக்கள் திட்டம்**

210. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு **ஜெர்மனி**

211. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர் **கட்டுப்படுத்தும் திட்டம்**

212. நீண்ட காலத் திட்டத்தின் மற்றொரு பெயர் **முன்னோக்குத் திட்டம்**

213. நீண்ட காலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் …………………..மாற்றமாகும் **தொழில்**

214. சர்வோதாயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார் ? **ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

215. இந்தியாவில் திட்டக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு------------ **1950**

216. " அடிமைத்தனத்திற்கான பாதை " என்ற புத்தகத்தை எழுதியவர் யார் ? **பிரடெரிக் ஹேயக்**

217. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொருப் பெயர்……………….. **நீண்ட காலத் திட்டமிடல்**

218. நிதி ஆயோக் கீழ்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது ? **அமைச்சரவைத் தீர்மானம்**

219. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம் **National Institution for Transforming India**

220. சட்டப் பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார் ? **பிரதமர்**

221. ' ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை ---------------ஆகும். **ஒருமை மற்றும் பன்மை**

222. புள்ளியியல் எண் விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார் ? **போடிங்ட்டன்**

A.Alexis.DBHSS.V.Pet

223. இரண்டாம் நிலை விவரங்களுக்கான ஆதாரம் -------------- **அ மற்றும் ஆ**

224. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது ---------- **முதல்நிலை விவரம்**

225. நேர்கோட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு ----------- பெயர் . **உடன் தொடர்புக் கெழு**

226. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன் தொடர்புக் கெழு எவ்வாறு இருக்கும் ? **நேர்மறையாக**

227. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும் பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன் தொடர்புக் கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும் ? **எதிர்மறையாக**

228. உடன்தொடர்புக் கெழு γ–ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும் **–1 மற்றும் 1**

229. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர் **கால்டன்**

230. ஒட்டுறவு பகுப்பாய்வின் நோக்கம் ?
**ஒரு காரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்து காரணியின்மதிப்பினை கண்டறிவது.**

231. சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு ………………….. பெயர் **ஒட்டுறவு**

232. Y = 2 – 0.2X எனில், Y அச்சு வெட்டு -------------- ஆகும். **2**

233. Y = β0+β1X, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் Y என்பது------------- **சார்பு மாறி**

234. Y = β0+β1X, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் **X** என்பது------------- **சாரா மாறி**

235. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு ? **பொருளியல் , கணிதம், மற்றும் புள்ளியியல்**

236. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் ? **ராக்னர் ஃபிரிஸ்க்**

237. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள்---------------- . **புள்ளிவிவரம்**

238. U என்பது ------------. **பிழைக் கருத்து**

239. U என்பது எதைக் குறிக்கிறது ? **விடுபட்ட காரணிகள்**

240. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு ? **3 பாடங்கள்**

## பகுதி – ஆ

**21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக**

'Macro' என்ற சொல்லின் பொருள்' பெரிய' என்பது ஆகும். பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும். 'பேரியல் பொருளாதாரத்தை வருவாய் கோட்பாடு' எனவும் அழைப்பர்

**22. பண வீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.**
பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**23. பொருளாதாரம் என்பதன் பொருள் யாது ?**
ஒரு பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையை குறிப்பதாகும். ஒவ்வொரு பொருளாதார அமைப்பும் அதனது தனிதன்மைகளை கொண்டு காணப்படும்.

**24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**
வளர்ந்த, வளராத, முன்னேறாத, மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

**25. முதலாளித்துவம் என்றால் என்ன ?**
பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும் சந்தையின் பங்கு அதிகமாகவும் கானப்படும். .உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே இருக்கும்.

**26. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.**
பொருளாதார மாதிரி என்பது, பொருளாதார நடவடிக்கைகள், அவைகளுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விளக்குகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**27. வருமானத்தின் வட்ட ஓட்டம் – வரையறு.**
ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.

## பகுதி – இ

**28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.**
1. ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
2. எதிர்கால பிரச்சினைகளைப் புரிந்துக் கொள்ளவும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.
3. நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.

**29. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.**
1. முதலாளித்துவ பொருளாதார அமைப்பு.
2. சமதர்ம பொருளாதார அமைப்பு.
3. கலப்புப் பொருளாதார அமைப்பு.

**30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.**
1. தானாக இயங்குதல் 2. வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்

3. கடின உழைப்பிற்கு வெகுமதி 4. பொருளாதார முன்னேற்றம்.
5. நுகர்வோர் இறையாண்மை 6. மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல்

**31. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.**

1. சிவப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம். 2. ஊக்கமில்லாமை
3. தெரிவு செய்வதில் சதந்திரமின்மை. 4. அதிகார குவிப்பு

**32. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.**

1. உற்பத்திச் சாதனங்களும் சொத்துக்களும் தனியார் மற்றும் பொதுத் துறைக்குச் சொந்தமாக இருக்கும்.
2. பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும்
3. பொருளாதாரத் திட்டமிடல்
4. பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு
5. சுதந்திரமும் கட்டுப்பாடும்

**33. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக.**

| S.N | **தன்மைகள்** | **முதலாளித்துவம்** | **சமத்துவம்** |
|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3 | மையபிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |

A.Alexis.DBHSS.V.Pet

**34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.**

இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டுமே காணப்படும்.

1. **இல்லத் துறை:–** இது உற்பத்தி காரணிகளை அளிக்கும் துறை ஆகும். இதன் மூலம் வருவாயை பெறுகிறது. மற்றும் அதன் வருவாயை நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது.

2. **நிறுவனத் துறை :–** இது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது. இல்லத்துறைக்கு சொந்தமான உற்பத்தி காரணிகளை பணியமர்த்துகிறது.

## பகுதி – ஈ

**35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**

பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை.

**1. தேசிய வருவாய் .**

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும்.

**2. பண வீக்கம்**

பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**3. வாணிபச் சுழற்சி.**

பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத் தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சினைகளை சந்திக்கின்றன .

**4. வறுமை மற்றும் வேலையின்மை**

வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையிமை மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**5. பொருளாதார வளர்ச்சி.**

பேரியல் பகுத்தாய்வின்மூலம் தான்ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துக் கொள்ளமுடியும்.

**6. பொருளாதார கொள்கைகள்.**

பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**36.நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**

**1.வளர்ச்சி நிலை.**

மக்கள் தங்களது பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பதாகும். பணிகள் அல்லது நடவடிக்கைகள் எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்குவது வளர்ச்சி நிலையாகும்.

**2.உற்பத்தி நடவடிக்கை**

பொருளாதார வளர்ச்சி நடவடிக்கையில் உற்பத்தி மிகவும் அவசியமானது. இது பல்வேறு பொருளாதார செயல்பாட்டிற்கு அவசியமானது.

**3.நுகர்வு நடவடிக்கை**

நுகர்வும் பொருளாதார நடவடிக்கையியின் அடிப்படை அம்சமாகும். நுகர்வு பொருளாதார வளர்ச்சி நிலையை காட்டுகிறது. மேலும் உற்பத்தியை தூண்டுகிறது.

**4.பகிர்வு நடவடிக்கை**

உற்பத்தி நடவடிக்கை மற்றும் பகிர்வு நடவடிக்கை இரண்டும் செயல்பட உதவுவது பகிர்வு நடவடிக்கை ஆகும்.

**5.பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகள்**

போக்குவரத்து, வங்கி பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். சுற்றுச்சூழல் ,ஆரோக்கியம், கல்வி ,பொழுதுபோக்கு ,ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல், போன்றவை பொருளாதாரமற்ற வெளிப்புற நடவடிக்கைகள் ஆகும்.

A.Alexis.DBHSS.V.Pet

***38.*** **முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக**

| எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது(அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லாசந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை. |
| 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடுகள் மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சம நிலையற்ற நிலை. |

**LESSON-2**

**பகுதி – ஆ**

**21. தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.**

ஒரு நாட்டின் உழைப்பும் முதலும் அந்நாட்டின் வளங்களுடன் கூடி ஒராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் அனைத்து வகையான பணிகள் ஆகியவற்றின் மொத்த நிகர மதிப்பு தேசிய வருவாய் எனப்படுகிறது.

**22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**

GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

**23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது ?**

NNP = GNP – தேய்மான கழிவு

NDP = GDP – தேய்மானம்.

**24. GNPக்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுது**

GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

NNP = GNP – தேய்மான கழிவு

**25. தனிநபர் வருமானம் என்றால் என்ன ?**

ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானமாகும்.

**26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

A.Alexis.DBHSS.V.Pet

**27. தேசிய வருவாய் கணக்கீட்டில் சுய நுகர்வு எவ்வாறு சிரமத்தைத் தருகிறது ?**

விவசாயிகள் தங்களின சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதி ஒதுக்கிறார்கள். விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

## பகுதி - இ.

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக**

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் ஆண்டு சராசரி வருமானமாகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

**29. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?**

தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளைக் கழித்த பின்பு கிடைப்பது செலவிடக்கூடிய வருமானமாகும். இது தனிநபர் நுகர்விற்காக் செலவிடக்கூடிய பண அளவு ஆகும்

**30. காரணி செலவில் NNP – விவரி.**

காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். காரணி செலவில் NNP என்பது சந்தை விலையில் NNPயின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும் மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.

**31. செலவுமுறைபற்றி ஒரு சிறு குறிப்பு தருக**

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

தனிநபர் சுய நுகர்வு செலவுகள்,( C ). நிகர உள்நாட்டு முதலீடு,( I ) அரசின் கொள்முதல்( G ) மற்றும் நிகர ஏற்றுமதி( X- M ) போன்ற செலவுகளை கூட்டி கணக்கிடப்படுகிறது.

GNP = C+ I+G+(X-M).

**32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு ?**

இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**33. தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

அதிக தலா வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும் .தலா வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்க வேண்டும் என்பது இல்லை . இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றை மாசுபடுத்தி அதிகமான வளர்ச்சியை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.

**34. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.**

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
2. பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.
4. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய
5. காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.

PART-D

**35. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது . தேசிய வருவாய் பொருளாதாரத்தின் சமூகக் கணக்கு எனச் சொல்லப்படுகிறது

**முக்கியத்துவம்**

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
2. பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.
3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.
4. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.
5. காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.
6. ஒரு நாட்டின் வருமானத்தை மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன

A.Alexis DBHSS.V.Pet

**36. தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.**

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை

1. உற்பத்தி முறை, 2. வருவாய் முறை மற்றும் 3. செலவு முறை . உற்பத்தி = வருமானம் = செலவு

**1. உற்பத்தி முறை.** உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.

ஒரே பொருள் இரு முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**2. வருவாய் முறை.**

வருமான முறை என்பது பகிர்வு பகுதியிலிருந்து கணக்கிடுவது ஆகும். உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

**3. செலவு முறை.**

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தசெலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

தனிநபர் சுய நுகர்வு செலவுகள்,( C ). நிகர உள்நாட்டு முதலீடு,( I ) அரசின் கொள்முதல்( G ) மற்றும் நிகர ஏற்றுமதி( X- M ) போன்ற செலவுகளை கூட்டி கணக்கிடப்படுகிறது.

**37. தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?**

**தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள்**

**1. மாற்றுச் செலுத்துதல்கள்.**

ஒய்வூதியம், வேலையின்மைக்கான உதவித் தொகை , மானியங்கள் போன்றவை அரசின் செலவுகளாகும் இச்செலவுகள் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்கப்படுவதில்லை.

**2. தேய்மானங்களை மதிப்பிடுவதில் சிக்கல்.**

தேய்மானத்தை தேசிய வருமானத்திலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. மிகக் கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**3. பணம் செலுத்தப்படாத சேவைகள்.**

இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். இப்பெண்களின் மதிப்பு மிக்கப் பணிகள் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

**4. சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் மூலம் பெறும் வருமானம்.**

சூதாட்டம், கடத்தல் போன்ற சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் மூலம் பெறும் வருமானம். நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்கப்படுவதில்லை.

**5. சுய நுகர்விற்காக உற்பத்தி**

விவசாயிகள் தங்களின சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**6. இருமுறைகணக்கீட்டுப் பிரச்சனை**

இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**7. மூலதன இலாபம்.**

மூலதன இலாபம் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்கப்படுவதில்லை.

A.Alexis.DBHSS.V.Pet

**38. பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.**

1. சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப் படுகிறது.
2. சமூகக் கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு மற்றும் இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப் படுகின்றன.

.3. சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல் அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க பயன் உள்ளதாக இருக்கும்

4. பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை விளக்குகிறது.
5. எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாக கணிப்பதற்கும் உதவுகிறது.

## LESSON-3

## PART-B

**21. முழு வேலைவாய்ப்பு வரையறு.**

கீன்ஸின் கூற்றுபடி முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பது ஆகும்.

**22. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது ?**

ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு பருவகால வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மை ஆகும்

**23. உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக .**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர் .

**24. தற்போதுள்ள சூழலில் ஆள்குறைப்பிற்கான காரணத்தைத் தருக.**

நிறுவனங்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் புதிய கண்டுபிடிப்புகளும் புதிய தொழில்நுட்பங்களும் எதிர்பார்க்கும் திறன்கள் மற்றும் திறமைகளை அந்நிறுவன உழைப்பாளர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை எனில் அவ்உழைப்பாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்படுகிறது..

**25. சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.**

1. முழு வேலைநிலை நிலவுகிறது.
2. உழைப்பு மற்றும் பண்டங்கள் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.
3. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.
4. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.
5. அரசின் செயல்பாடுகள் ஏதும் இல்லை.

**26. விளைவுத் தேவை என்றால் என்ன ?**

விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். எனவே விளைவுத் தேவை தேசிய வருவாய்க்குச் சமமாக இருக்கும்.

ED = Y = C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு.

**27. தொகு அளிப்பின் கூறுகள் யாவை ?**

மொத்த அளிப்பு = C + S + T + Rf

1. மொத்த நுகர்வுச் செலவு (C) 2. மொத்த தனியார் சேமிப்பு (S)
3. நிகர வரி வசூல் (T). 4. மாற்று செலுத்துதல்கள் மற்றும் உதவித்தொகை. Rf

## PART-C

**28. கீழ்க்காணுபவற்றை சுருக்கமாக விவரி.**

அ. பருவகாலவேலையின்மை ஆ. உடன்பாடில்லா வேலையின்மை
இ. படித்தவர்வேலையின்மை

**அ. பருவகாலவேலையின்மை**

ஒரு வருடத்தின் சிலகாலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.

**ஆ. உடன்பாடில்லா வேலையின்மை**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது.

**இ. படித்தவர்வேலையின்மை**

சிலநேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

A.Alexis.DBHSS.V.Pet

**29. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி கூலிக்குறைப்பு எவ்வாறு வேலையின்மைப் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.**

1. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.
2. உற்பத்திக்காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்கு ஏற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருப்பார்கள் .
3. என்வே கூலி குறைப்பு வேலையின்மைக்கு தீர்வாக அமையும்.




**வரைபடத்தில்**

OW கூலி விகிதத்தில் ON அள்வு வேலைவாய்ப்பு உள்ளது கூலி விகிதமானது OW1 ஆக குறையும் போது வேலைவாய்பானது ON1ஆக அதிகரிக்கிறது. பேராசிரியர் பிகு , வேலையின்மை பிரச்சனைக்கு இக்கோட்பாட்டை அடிப்படைத் தீர்வாக எடுத்துக்கொண்டார்.

**30. J.B. சே விதியில் விளைவுகளைப்பற்றி குறிப்பு வரைக**

1. அதிக உற்பத்திக்கு மற்றும் வேலையின்மைக்கு வாய்ப்பில்லை.
2. நாட்டில் பய்ன்படுத்தாத வளங்களை முழுமையாக பயன்படுத்தி முழுவேலைவாய்ப்பை அடைதல்

3. விலைக் கருவி செயல்படுவதால் அரசின் தேவை இல்லை.
4. சேமிப்பு மற்றும் முதலீட்டுச் சம நிலை வட்டி வீத மாற்றத்தால் தீர்மானிக்கப்படும்.
5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.

**31. கீன்ஸின் கோட்பாட்டை தொடர்வரைபடம்(Flowchart) மூலம் விளக்குக.**



**32. தொகு தேவை என்றால் என்ன ? அதன் கூறுகளைக்கூறுக.**

கீன்சு கோட்பாட்டின்படி ஒரு பொருளாதாரத்தின் தொகுதேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. தொகுதேவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது அவை
1. நுகர்வுத் தேவை, 2. முதலீட்டுத் தேவை,
3. அரசுச் செலவு. 4. நிகர ஏற்றுமதி. AD = C + I + G + (X - M)

A.Alexis DBHSS V.Pet

**33. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**

தொகு அளிப்பு என்பது உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான உழைப்பாளர்கள் மற்றும் பிற பொருட்கள் பயன்படுத்துவதை குறிக்கும். கீழ்கண்ட வரைபடம், தொகு அளிப்பைகோட்டை விளக்குகிறது.



1. Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போ து உள்ள நிலையையும் ,
2. Z1 வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன
3. ONf அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. எனவே, Nf க்குப் பின்னர் , தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக , நெகிழ்வற்றதாக உள்ளது.
4. எனவே பொருளாதார நடவடிக்கையை தீர்மானிக்கும் காரணிகளில் தொகு அளிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது.

**34. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும் ஐந்து)**

| எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1 | நீண்ட காலச் சமநிலை | குறுகிய காலச் சமநிலை |
| 2 | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3 | பணத்தின்பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும்,மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும் |

| | | |
|---|---|---|
| 4 | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5 | அரசு தலையீடு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது |

## PART-D

**35. வேலையின்மைகளின் வகைகளை விவரி**

**வேலையின்மை.** வேலை செய்யை தகுதியும், விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காத நிலை வேலையின்மை எனப்படும்.

**1. வாணிபச் சூழல் வேலையின்மை.** வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாத போது நிகழ்வதாகும்

**2. பருவகால வேலையின்மை**

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.

**3. உடன்பாடில்லா வேலையின்மை**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர் .

**4.படித்தவர்வேலையின்மை**

சிலநேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

**5. மறைமுக வேலையின்மை**

வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை அல்லது குறைவேலையுடைமை எனப்படும்.

A.Alexis.DBHSS.V.Pet

**36. சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.**

1. சந்தை விதி அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்கிறது. ஆனால் கீன்சு கூற்றுப்படி அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இருக்கிறது.
2. கீன்சு கூற்றுப்படி அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இவ் விதி செயல்படாது.
3. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது
4. பணம் நடுநிலையாக இருக்காது.
5. முழு வேலைவாய்ப்பிற்கு சாத்தியம்மில்லை என்று கீன்சு குறிப்பிடுகிறார்.
6. அரசின் தலையீடு அவசியம் என்று கீன்சு குறிப்பிடுகிறார்.

**37. ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.**

கீன்ஸின்வேலை வாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன. மேலும்நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.




**வரைபடத்தில்**

1. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு ‘E’ என்ற புள்ளியில் சம நிலை அடைகிறது.
2. E’ என்ற புள்ளியில் வேலை வாய்ப்பு No ஆக இருக்கும்.

3. ON1 அளவு வேலைவாய்ப்பில், தொகுத் தேவை அதிகமாக இருக்கும் ஆனால் தொகு அளிப்பு குறைவாக இருக்கும் இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.
4. சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர்.
5. ஏனெனில் No நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுத்தேவை, தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும்
6. உற்பத்தி சம நிலையை தீர்மானிப்பத்தில் , தொகு தேவை கருத்து அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.
7. வரைபடத்தில் No மற்றும் Nf க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது

**38. தொன்மைக்கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.**

| எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1 | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2 | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3 | பணத்தின்பணிஎன்பதுஒருபுறம்பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும் |
| 4 | நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5 | அரசு தலையீடு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |
| 6 | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| 7 | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது | வட்டி வீதம் மாறாதது |
| 8 | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |

A.Alexis.DBHSS.V.Pet

## LESSON-4
## PART-B

**21. நுகர்வுச் சார்பு என்றால் என்ன ?**

**நுகர்வுச்சார்பு.**

இது வருமானத்திற்கும், நுகர்விக்கும் இடையே உள்ள தொடர்பாகும். சிலர் வருமானத்தை முழுவதுமாக செலவு செய்கிறார்கள் வேறுசிலர் ஒருபகுதியை செலவு செய்து மீதத்தை சேமிக்கின்றனர்.

$c=a+by$, $c=20+0.8y$

**22. "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன ?**

நுகர்வுச் சார்பு அல்லது "நுகர்வு நாட்டம்" என்பது வருமானத்திற்கும், நுகர்விக்கும் இடையே உள்ள தொடர்பாகும்.

**23. சராசரி நுகர்வு நாட்டம் (APC) – வரையறு.**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணித ரீதியாக

$APC = C / Y$.

**24. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC) – வரையறு.**

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது. கணித ரீதியாக $MPC = \Delta C / \Delta Y$

**25. சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றால் என்ன ?**

இது வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பாகும்.

**26. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) – வரையறு**

சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்த சேமிப்பை மொத்த வருவாய் வகுத்தால் கிடைக்கக் கூடியதாகும். APS = S / Y

**27. இறுதி நிலைசேமிப்பு நாட்டம் (MPS)– வரையறு**

இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை , வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும். MPS = ΔS / ΔY

**28. பெருக்கி – வரையறு**

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். எனவே பெருக்கி K = ΔY / ΔI. என உள்ளது.

**29. முடுக்கி – வரையறு.**

"தூண்டப் பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்" – கே.கே. குரிஹாரா.

**28A . பெருக்கியின் வகைகளைக் கூறுக.**

1. வரி பெருக்கி 2. வேலை வாய்ப்பு பெருக்கி
3. வெளிநாட்டு வர்த்தக பெருக்கி 4. முதலீடு பெருக்கி.

(அ) இயங்கா பெருக்கி மற்றும் இயங்கும் பெருக்கி

A.Alexis.DBHSS.V.Pet

**PART-C**

**30. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக**

கீன்ஸ் உளவியல் அடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். நுகர்வு என்பது வருமானத்தைப் பொருத்தது ஆனால் வருமானம் உயர்ந்த அளவிற்கு நுகர்வு உயர்வு வீதம் அதிகரிக்காது. இவ்விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துக் கூறுகிறது. வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வு மற்றும் சேமிப்பு அதிகரிக்கின்றது.

**31. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**

| தன்னிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|
| 1. தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2. வருவாயைப் பொறுத்து நெகிழாதது. | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது. |
| 3. நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

**32. நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

**அககாரணிகள்**

**1. முன்னெச்சரிக்கை நோக்கம்** : எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது.
**எ.கா.** விபத்து, உடல் நலனின்மை

**2. எதிர்பார்க்கும் நோக்கம்** : எதிர்கால தேவைக்கான விருப்பம். **எ.கா.** வயதான காலம்

**3. வாணிப நோக்கம் :** வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்

**புறக் காரணிகள்**

**1) வருமான பகிர்வு:** செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும்.

**2) விலை அளவு.** விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள்.

**3) வட்டி விகிதம்:** அதிக வட்டி விகிதம் சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.

**33. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக**

**முடுக்கி**

முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பை குறிக்கும் . முடுக்கி (β) = ΔI / ΔC

**பெருக்கி**

வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். எனவே பெருக்கி K = ΔY / ΔI.

அனுமானமாக ΔC = 50 ΔI = 100 ΔY = 400

முடுக்கி (β) = ΔI / ΔC = 100 / 50 =2

பெருக்கி K = ΔY / ΔI. = 400 / 100 = 4

**34. மிகைப் பெருக்கி – விளக்குக.**

மிகைப் பெருக்கி எளிய பெருக்கியைவிட சிறந்ததாகும், ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும், ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்

**35. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

**1. பழைய கடன்களை திரும்ப செலுத்துதல்:–** MPC குறைந்து அதன் காரணமாக பெருக்கியின் மதிப்பு தடைப்படும்

**2. செல்வத்தை வாங்குதல் :–** அதிகரித்த வருமானம் நிலம், கட்டிடம் மற்றும் பங்குகளை வாங்குவதற்காக பயன்படுத்தினால் பணம். நுகர்வுக்குள் வராது. இதன் விளைவாக பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

**3. பண்டங்களையும், பணிகளையும் இறக்குமதி செய்தல்:–** இறக்குமதி பெருக்கியின் மதிப்பை குறைக்கும்.

**4. நுகர்வு பொருட்களின் கிடைக்காமை:–** இது நுகர்வுச் செலவையையும், பெருக்கியின் மதிப்பையையும் குறைத்துவிடும்.

A.Alexis.DBHSS.V.Pet

PART-D.

**36. கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.**

**நுகர்வுச் சார்பின் உளவியல் விதி**

கீன்ஸ் உளவியல் அடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். இவ்விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துக் கூறுகிறது.

**அனுமானங்கள்**

1. மற்றவை மாறாது 2. சுமுகமான சூழல் நிலவுகிறது.

3. முதலாளித்துவத்தில் தலையிடாக் கொள்கை கடைபிடிக்கப்படுகிறது.

**விதியின் கருத்துக்கள்**

1. வருமானம் உயரும்போது ,நுகர்வுச் செலவும் அதிகரிக்கும் ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

2. அதிகரித்த வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பிற்கும் இடையே பிரிக்கப்படுகின்றது

.3. அதிகரித்த வருமானம், எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை அதிகரிக்கச் செய்யும்



**வரைபடத்தில்**

1. வருமானம் Y யிலிருந்து Y1 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு OC2 ஆக அதிகரித்திருக்க வேண்டும் ஆனால் நுகர்வு OC1 ஆக மட்டுமே அதிகரித்துள்ளது ஏனெனில் C1-C2 அளவு சேமிக்கப்படுகிறது.
2. வருமானம் Y1 யிலிருந்து Y2 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு OC4 ஆக அதிகரித்திருக்க வேண்டும் ஆனால் நுகர்வு OC3 ஆக மட்டுமே அதிகரித்துள்ளது ஏனெனில் C3–C4 அளவு சேமிக்கப்படுகிறது.
3. எனவே இவ்விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துக் கூறுகிறது.

**37. நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

**அககாரணிகள்**

1. **முன்னெச்சரிக்கை நோக்கம்** : எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை
2. **எதிர்பார்க்கும் நோக்கம்** : எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்
3. **வாணிப நோக்கம்** :– வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்
4. **கர்வநோக்கம்** :– விட்டுச் செல்வதற்கான விருப்பம்
5. **பேராசைநோக்கம்** :– முற்றிலும் மோசமான உள்ளுணர்வு

A.Alexis.DBRSS.V.net

**புறக் காரணிகள்**

1) **வருமான பகிர்வு:–** செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும்.
2) **விலை அளவு:–** விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள்.
3) **வட்டி விகிதம்:–** அதிக வட்டி விகிதம் சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.
4) **நிதி கொள்கை:–** அரசாங்கம் வரியை குறைக்கும் போது, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.
5) **நுகர்வோர் கடன்:–** சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது இது நுகர்வை அதிகப்படுத்தும்.

**38. பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.**

இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்பது வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடும் பங்கைக் குறிப்பதாகும். $MPC = \Delta C / \Delta Y$ பெருக்கியின் மதிப்பு MPC யைப் பொறுத்து அமையும்

$MPC + MPS = 1$, $MPS = 1 - MPC$ .

பெருக்கி $K = 1/1-MPC$ ( அல்லது ) $K = 1/MPS$

பெருக்கி செயல்படும் விதம்

இங்கு இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனக் கொண்டால்,

இறுதிநிலை சேமிப்பு நாட்டம் 0.2 எனில் $K = 1/1-MPC$

K = 1 / 0.2

K = 5

எடுத்துக்காட்டாக முதலிடு ₹.200 கோடியில் இருந்து ₹210 கோடி ஆக அதிகரிக்கும்போது வருமானம் ₹1000 கோடியில் இருந்து ₹1050 கோடி ஆக அதிகரிக்கும் ஏனெனில் பெருக்கியின் செயல்பாட்டால் இது ஏற்படும்.

K = ΔY / ΔI ,

ΔY = K x ΔI, K = 5 , ΔI = ₹10கோடி

ΔY = 5 x ₹10கோடி = ₹50கோடி.

**39. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.**

**முடுக்கி**

முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பை குறிக்கும் . முடுக்கி (β) = ΔI / ΔC

நுகர்வு பொருட்களின் தேவையில் ஏற்படும் மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது

முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம்

எடுத்துக்காட்டாக நுகர்வுப் பொருட்களின் தேவை ரூ.100 கோடியில் இருந்து ரூ 110 கோடி ஆக அதிகரிக்கும் போது முதலிடு ரூ 200 கோடியில் இருந்து ரூ 220 கோடி ஆக அதிகரிக்கும் ஏனெனில் முடுக்கியின் செயல்பாட்டால் இது ஏற்படும்.

β = ΔI / ΔC

ΔI = β x ΔC

( β = 2 , ΔC = ₹10கோடி எனக் கொண்டால்

ΔI = 2 x 10 = ₹20கோடி. )

A.Alexis.DBHSS.V.Pet

**40. மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை ?**

**மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC)**

1. இது மூலதனத்தின் அளிப்பு விலையைப்பொறுத்து அமைகிறது.
2. ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது.
3. வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது
4. இது ஒரு "இருப்பு" கருத்துரு.
5. ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது

**முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI)**

1. மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது.
2. ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது.
3. வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது.
4. இது ஒரு ஓட்டக் கருத்துரு
5. கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது

LESSON-5

PART-B

**21. பணத்தின் இலக்கணம் வரைக .**

வாக்கர் கூற்றுப்படி பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம் .

**22. பண்டமாற்று என்றால் என்ன ?**

பண்டமாற்று முறை என்பது பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குதல் ஆகும்.

**23. பண்டப் பணம் என்றால் என்ன ?**

பண்டமாற்று முறையில் ஏற்பட்ட பிரச்சனைகளை தீர்பதற்காக பண்டப் பணமுறை உருவாக்கப்பட்டது. இம்முறையில் சில பண்டங்கள் பணமாக பயன்படுத்தப்பட்டது. உதாரனமாக விலங்குகளின் தோல், இறகுகள், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள் மற்றும் ஆயுதங்கள்.

**24. பொன் திட்டம் என்றால் என்ன ?**

ஒரு பணத்தின்அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. அப் பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக வாங்குதிறன் நிர்வகிக்கப்பட்டு வந்தது

**25. நெகிழிப் பணம் என்றால் என்ன ? உதாரணம் தருக.**

நெகிழிப் பணம் , காகிதப் பணத்திற்கு மாற்றாக உள்ளது. இது நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும். எ.கா. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, வணிக நிறுவன அட்டை, அந்நிய செலாவணி அட்டை, மற்றும் சூட்டிகை அட்டை

**26. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.**

பணவீக்கம் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளில் பொது விலை மட்ட அதிகரிப்பு. கோல்பர்ன் கூற்றுப்படி

'' குறைந்தஅளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை'''' ஆகும்.

A.Alexis.DBHSS.V.Pet

**27. தேக்கவீக்கம் என்றால் என்ன ?**

பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

## PART-C

**28. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக .**

நவீன பண முறையில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும். உலோகத் திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணமாக பயன்படுத்தப்பட்டது. அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

**29. பண அளிப்பு என்றால் என்ன ?**

ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பணஅளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும். இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பில் M1, M2, M3 மற்றும் M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது:

**30. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?**

1. ரொக்க வைப்பு விகிதம் 2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்.

3. ரொக்க இருப்பு விகிதம் 4. சட்டபூர்வ நீர்மை விகிதம்

**31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.**

I. பணவீக்கம் வேகத்தின் அடிப்படையில்

1. தவழும் பணவீக்கம 2. நடக்கும் பணவீக்கம் . 3. ஓடும் பணவீக்கம் .

4. தாவும் பணவீக்கம் அல்லது உயர் பணவீக்கம்

II. . தேவை –இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீககம் .
III. இதர காரணிகள் (தூண்டும் அடிப்படையில் )
i) காகிதப்பண பணவீக்கம் ii) கடன்பண பணவீக்கம் iii) வரவு–செலவு பற்றாக் குறை தூண்டல் பணவீக்கம்.

**32. தேவை –இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.**

**தேவை –இழுப்பு பணவீக்கம் .**

பண்டங்களுக்கான தேவை அதிகரிக்கும் போது விலை அதிகரிக்கிறது. இது தேவை இழுப்பு பணவீக்கம் எனப்படும்

**செலவு உந்து பணவீக்கம் .**

உற்பத்திச் செலவு அதிகரிக்கும் போது பண்டங்களுக்கான விலை அதிகரிக்கிறது. இது செலவு உந்து பணவீக்கம் எனப்படும்

**33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.**

i) மார்ஷலின் சமன்பாடு M = KPY

M = பணத்தின் அளவு Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலை மட்டம் K = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி. மார்ஷல் கூற்றுப்படி K , பணமதிப்பினை தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.

ii) கீன்ஸின் சமன்பாடு n = pk

கீன்ஸ் கூற்றுப்படி மக்களின் ரொக்க விருப்பத்தினை (k) பணவியல் அமைப்புகள் மாற்று இயலாது. பணத்தின் அளிப்பினை ( n ) நெறிப்படுத்துவதன் மூலம் பணத்தின் மதிப்பினை நிலைப்படுத்தலாம் என்கிறார் பின்னர் , கீன்ஸ் தனது சமன்பாட்டினை பின்வருமாறு விரிவாக்குகிறார்:

n = p (k + rk') or

p = n / (k + rk')

r = வங்கிகளின் ரொக்க இருப்பு விகிதம்

k' = வங்கி வைப்புகளாக சமுதாயம் வைத்திருக்கும்.

பணத்தின் அளவு – நுகர்ச்சிப் பொருட்களின் விலை.

A.Alexis.DBHSS.V.net

**34. மீள்பணவீக்கம் பற்றி விளக்குக ?**

வேலைவாய்ப்பினை பாதிக்காதவகையில் கடன்களை கட்டுப்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தை குறைப்பதாகும்.‘‘வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல் முறையே மீள்பணவீக்கம் ஆகும்.

## PART-D

**35. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.**

**பணஅளவுக் கோட்பாடு**

பணஅளவின் கோட்பாட்டை உருவாக்கியவர் இர்விங்பிஷர் ஆவார். பணஅளவுக் கோட்பாட்டின் மையக்கருத்து பணஅளிப்பின் அளவு மாற்றம் அடையும்போது விலையும் மாற்றம் அடையும் .

**பணப் பரிவர்த்தனைச் சமன்பாடு**

MV = PT என்பது பணப் பரிமாற்றத்தின் சமன்பாடு என்று அழைக்கப்படுகிறது.

P=விலை மட்டத்தை குறிக்கும். T= வணிபத்தின் அளவு

M= பண அளிப்பு V= பணத்தின் சுழற்சி வேகம்

ஃபிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு ( MV ) மொத்த பணத் தேவைக்கு (PT) சமமாகஇருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

**பண அளிப்பு = பணத் தேவை**

www.Padasalai.Net www.CBSEtips.in

இது ரொக்கப் பரிவர்த்தனைச் சமன்பாடு என்றும் அழைக்கப்படும்.மேற்சொன்ன சமன்பாடு காகிதப் பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது.தற்காலத்தில் பண அளிப்பின் பெரும்பகுதி காசோலைகள், மாற்றுச் சீட்டுக்கள், மற்றும் ஏனைய கடன் கருவிகள் உள்ளடங்கி இருக்கிறது. எனவே இச்சமன்பாட்டை கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கலாம்.

PT=MV + M1 V1

M1 = மொத்த கடன் கருவிகள் V1 = கடன் கருவிகளின் புழக்க வேகத்தைக் குறிக்கும்.




**வரைபட விளக்கம் :**

வரைபடம் (A) மொத்த பண அளவில் ஏற்படும் மாற்றம் விலை மட்டத்தில் எவ்வாறு மாறுகிறது என்று விளக்குகிறது. பண அளவு OM ஆக இருக்கும் போது விலை மட்டம் OP-ஆக உள்ளது. பிறகு பண அளவு OM2 ஆக இரட்டிப்பாக்கும் பொழுது விலை மட்டம் OP2 ஆக இரட்டிப்பாகிறது. மேலும் பண அளவு OM4 என நான்கு மடங்காகும் போது விலை மட்டமும் OP4 என நான்கு மடங்காகிறது.

வரைபடம் (B) பணத்தின் அளவு M ஆக இருக்கும் போது பண மதிப்பு YP ஆகவும் பண அளவு OM4 என கூடும் போது, பண மதிப்பு YP4 என குறைந்து அதன் தலைகீழ் உறவை விளக்குகிறது.

**திறனாய்வு**

1. இக்கோட்பாட்டின் முக்கிய குறைபாடு முழு வேலை வாய்ப்பை எடுகோளாக கொண்டுள்ளதே ஆகும்.
2. பண அளவைத் தவிர மற்ற காரணங்களாலும் விலை பாதிக்கப்படும் அவை அரசின் பணக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கை ஆகும்.

A.Alexis.D

**36. பணத்தின் பணிகளை விளக்குக.**

**பணத்தின் பணிகள்.**

**I. முதன்மைப் பணிகள்.**

**1. பணம் ஒரு பரிவர்த்தனை கருவி.**

நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

**2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.**

. ஒரு பண்டத்தை வாங்கும் பொழுது அதன் விலையை பணமாகக் கொடுக்கிறோம். ஆகவே பண்டத்தின் மதிப்பு பணத்தால் அளவிடப்படுகிறது.

**II. இரண்டாம் நிலைப் பணிகள்**

**1. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன்.**

சொத்துக்களை சேமித்து வைக்க விரும்புபவனுக்கு பணம் எளிய வசதியான கருவி ஆகும்.

**2. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை :**

எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாக பயன்படுகிறது.

**3. பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும்.**

எல்லை கடந்தும் பரிவர்த்தனைகள் நடைபெறுகிறது. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

III **துணைப் பணிகள்**

i. கடன்முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது.

ii தேசிய வருவாயை எளிதாக பகிர்ந்தளிக்க உதவுகிறது. ( வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம் ).

iii.இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது:

iv. பணம் மூலதனத்தின் உற்ப த்தி திறனை உயர்த்துகிறது.

IV. **இதரபணிகள்.**

i திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது.

ii. பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது.

iii. பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது

**37. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை ?**

I. **பணவீக்கத்திற்கான காரணங்கள்**

i) பண அளிப்பு உயர்வு : காகித பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

ii) **செலவிடத் தகுந்த வருவாயில் உயர்வு** : இது பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை தூண்டுகின்றன. இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படும்.

iii) **உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்:** தற்காலத்தில் அரசின் செயல்பாடுகள் விரிவடைந்து வருவதால் பொதுச் செலவுகளின் அளவு கூடி வருகிறது. இதன் காரணமாகவும் பணவீக்கம் ஏற்படுகிறது.

iv) **நுகர்வோர் செலவு அதிகரித்தல்** : தவணை மற்றும் கடன் முறைகள் நுகர்ச்சிப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

v) **மலிவு பணக் கொள்கை.** இது கடன் அளவை அதிகப்படுத்தும். இது பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

vi. **பற்றாக்குறை நிதியாக்கம்**

தற்கால அரசுகள் மிக அதிகமான செலவினங்களை மேற்கொள்கின்றன. இதனால் வரவு–செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை சரி செய்ய புதிய காகிதப் பணம் அச்சடிப்பதால் பண அளிப்பு அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது.

vii) **கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள், மற்றும் கறுப்புப் பணம்.**

இவைகளின் காரணமாக தொகு தேவை அதிகரித்து விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

II. **பணவீக்கத்தின் விளைவுகள்.**

i). உற்பத்தியின் மீதான விளைவு. விலை ஏற்றம் உற்பத்தியை அதிகரிக்கத் தூண்டும். இக்காலத்தில் பணவீக்கம் மிகைவேக பணவீக்கமாக மாறினால் வாணிபம் அழியும்.

ii). **பகிர்வில் ஏற்படும் விளைவுகள்.**

பணவீக்ககாலத்தில் .

1.வணிகர்களும், உற்பத்தியாளர்களும் அதில் இலாபத்தை ஈட்டுவார்கள்.

2. நிலையான வருமானம் பெறுபவர்கள் அதிகமாக பாதிக்கப்ப்டுவார்கள்

3.நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்திருப்பவர்கள் அதிக இழப்பை அடைவார்கள்.

4. வாடகை பெறுவோர் அதிக இழப்பை அடைவார்கள்.

**38. வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.**

**வாணிபச் சுழற்ச்சியின் கட்டங்கள்.**

i) **பூரிப்பு .**

வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்

A.Alexis.DBISSV.net

**ii) பின்னிறக்கம்.**

பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடடிவக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். இதன் காரணமாக முதலீட்டைபெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். மக்களின் நீர்மை விருப்பம் அதிகரித்து பணச்சந்தைநடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

**iii) மந்தம்.**

வணிகச் சுழற்ச்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும். மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடைய செய்யும். மந்தத்தின் கீழ் நிலை தொட்டிஎன்றழைக்கப்படுகிறது.

**iv) மீட்சி .**

இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் தேவையை .உயர்த்துகிறது. இதனால் கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக துவங்குகிறது. இதனால், உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, லாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

## LESSON- 6

### PART –A

**21. வணிக வங்கிகள் என்பதனைவரையறு.**

பொதுவாக வங்கி என்பது வணிக வங்கிகளையே குறிக்கும்.பேராசிரியர் கிரௌத்தர் கூற்றுப்படி, வங்கியாளர்களின் பணியாவது பரிவர்த்தனை மூலம் பணத்தைப் பெற்றும் அதனை கடனாகவும் கொடுப்பதாகும் .

**22. கடன் உருவாக்கம் என்றால் என்ன ?**

கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பணஅளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல். மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

A.Alexis.DBHSS.V.Pet

**23. மைய வங்கி என்பதனைவரையறு.**

பி.ஏ. சாமுவேல்சன் மைய வங்கியானது வங்கிகளின் வங்கி ஆகும். மேலும் நாட்டின் பண அளிப்பினைக் கட்டுப்படுத்துவதும் மீப்பெரு மதிப்புப் பணத்தைக் கொண்ட அமைப்பு என்று வரையறை செய்துள்ளார்.

**24. CRR மற்றும் SLR ஆகியவற்றினைவேறுபடுத்துக.**

வணிக வங்கிகள் தங்கள் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை மைய வங்கியில் இருப்பாக வைக்க வேண்டும். இதுவே ரொக்க இருப்பு வீதம் ( CRR ) எனப்படும் சட்டப்பூர்வ நீர்மை விகிதமானது (SLR ) வணிக வங்கிகள் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டிய நீர்மைச் சொத்துக்களின் விகிதம் ஆகும்.

**25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.**

மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களையும் மற்றும் தனியார் நிறுவனங்களின் தகுதி படைத்த பத்திரங்களையும் வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் வெளி அங்காடி நடவடிக்கைகள் எனப்படுகின்றது.

**26. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன ?**

இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும். வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த முடியும்.

**27. விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக.**

1. திறமை பெற்ற அலுவலரை நியமித்து விவசாய கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.

2..இதர வங்கி நடவடிக்கைளில். சிறப்பு வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.

3. ஊரகத் துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக விவசாயக்கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

## PART-C

**28. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினைஎழுதுக.**

கடன் உருவாக்கம் என்பது கடன் மற்றும் முன்பண பெருக்கத்தினை குறிக்கும்.. வங்கிகளால் உருவாக்கப்படும் வைப்புக்கள் இருவகைப்படும். அவை 1. முதல்நிலை வைப்புகள் மற்றும் 2. பெறப்பட்ட வைப்புகள். ஒரு வாடிக்கையாளர் தனது பெயரில் பணத்தினை வங்கியில் செலுத்துகிறார் இது முதல்நிலைவைப்பு என அழைக்கப்படுகிறது. முதன்மை வைப்புக்களைக் கொண்டே வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குகின்றது. கடன்கள் வாடிக்கையாளர் கையில் ரொக்கமாக கொடுக்காமல் அவர் கணக்கில் செலுத்தப்படும். இது பெறப்பட்ட வைப்பு எனப்படுகிறது. ஒவ்வொரு கடனும் புதிய வைப்பினை உருவாக்குகிறது இவ்வாறு வழங்கப்படும் வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும்,

**29. வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக**

1. இது ஒரு நிதி நிறுவனம் ஆகும்.

2. அது முழு வங்கிக்கான உரிமம் கொண்டதும் அல்ல, மற்றும் மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.

3. அவை கடன் பெற்று கடன் வழங்குகின்றது. அவை பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.

4. ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் இரு வகைப்படும்: i. பங்குச் சந்தை மறறும் இதர நிதி நிறுவனங்கள் ii. நிதி நிறுவனங்கள், நிதி கழகங்கள், சீட்டு நிறுவனங்கள், யூனிட் டிரஸ்ட் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள்.

A.Alexis.DBHSS.V.Pet

**30. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக்கூறுக.**

**கடன் கட்டுப்பாட்டு முறைகள்**

| **கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள்** | **கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்** |
|---|---|
| 1. வங்கி விகிதக் கொள்கை<br>2. வெளிச்சந்தைநடவடிக்கைகள்<br>3. மாறும் குறைந்தபட்ச வங்கி ரொக்க இருப்பு விகிதம் | 1. கடன் பங்கீடு<br>2. நேரடி நடவடிக்கைகள்<br>3. நெறி முறை தூண்டல்<br>4. விளம்பரப்படுத்துதல்<br>5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல்<br>6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல் |

**31. நபார்டின் பணிகள் யாவை ?**

1. நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக மறுகடனை வழங்குகிறது.

2. மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது

3. மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

4. நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

**32. இந்திய தொழில் நிதிக்கழகத்தின் பணிகளைக்குறிப்பிடுக.**

பாராளுமன்ற சட்டப்படி இது 1948–ஆம் ஆண்டு ஜுலை 1–ல் அமைக்கப்பட்டது. இக்கழகம் பின்வரும் பணிகளை செய்கிறது.

1. இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
2. வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.
3. சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது.
4. வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

**33. பணச்சந்தையையும், மூலதனச் சந்தையையும் வேறுபடுத்துக.**

அதிக நீர்மைத் தன்மையை கொண்டதும் குறுகிய காலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகளை கையாளும் சந்தையே பணச் சந்தை எனப்படுகிறது.–– எ.கா. அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், அழைப்புப் பணம்.

நீண்டகால நிதிக்கருவிகளை வாணிபம் செய்யும் சந்தை மூலதனச் சந்தை எனப்படுகிறது. எ.கா. கடன் பத்திரங்களும் சமபங்குகளும் ஆகும். அந்நிய செலாவணி, முன்பேர வர்த்தகம் இதில் அடங்கும்.

**34. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.**

**நோக்கங்கள்**

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது, 2. இலஞ்சத்தை தடுப்ப து
3. தீவிரவாதித்திற்கு பணம் செல்வதை தடுப்பது மற்றும்
4. கள்ளப் பணத்தினை தடுப்படுது ஆகியன

A.Alexis.DBHSS.V.Pet

பகுதி – ஈ

**35. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.**

**1. மூலதன திரட்சி:**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதன திரட்சி மிக அவசியம். வங்கிகள் பொது மக்களிடம் உள்ள சேமிப்புகளைத் திரட்டி அதை முதலீட்டிற்கு கொண்டுவந்து உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன.

**2. கடன் உருவாக்கம்.:**

வங்கிகளின் கடன் உருவாக்கம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியைப் பெற்றுத் தருகின்றன. இதன் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் ஆகியவை அதிகரித்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

**3. அதிக உற்பத்தித் திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைப் படுத்துதல்**

வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தினை முதலீடு செய்கிறது ஒரு துறையில் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் அத்துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனை குறைத்துக் கொண்டு, அதிக உற்பத்தி திறன் கொண்ட துறை களுக்கு கூடுதலாக முதலீட்டுக் கடனை வழங்கி பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்றன

**4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல் :** வங்கிகள் எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளதோ அந்த பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும், முன்பணங்களையும் வழங்குகிறது. ஆகவே , உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளில் நவீனத்துவத்தைப் புகுத்தி நாட்டின் தேசிய வருவாய் உயர்வதற்கு வழி செய்கின்றனர்.

**5. கடனை பணமாக்குகிறது :**

வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக் கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன் மூலம் உற்பத்தி மற்றும் வணிக நடவடிக்கைகளில் பாதிப்பு .ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது.

**6. அரசிற்கு நிதி வழங்குகிறது**

தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அரசிற்குத் தேவைப்படும் நீண்ட கால மற்றும் குறுகியகால கடன்களை வழங்குகிறது.

**7. வேலை வய்ப்பினைஉருவக்குதல்**

வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பின் வங்கித்துறை பெருமளவுக்கு வளர்ந்துள்ளது. நிறைய கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கத்தினைச் செய்வதால் வேலைவாய்புகள் உருவாகிறது.

**36. வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.**

**I. முதன்மைப் பணிகள்.**

1. வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல்.

பொது மக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல். அவை கேட்பு வைப்புகள் மற்றும் கால வைப்புகள்.

a) கேட்பு வைப்புகள். அவை சேமிப்பு வங்கி கணக்கு மற்றும் நடப்பு கணக்கு.

b) கால வைப்புகள். ஒப்பந்த காலத்திற்கு முன் வைப்பு நிதியை பெற இயலாது. அதிக வட்டி வழங்கப்படுகிறது.

2. கடன் வழங்கல்:

வணிக வங்கிகள் ரொக்கக் கடன், மாற்றுச் சீட்டுத் தள்ளுபடி மிகைப்பற்று ஆகிய முறைகளில் கடன் வழங்குகிறது.

**II. இரண்டாம் நிலைப்பணிகள்**

**1. முகமைப் பணிகள்.**

வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக இருந்து செய்யும் பணிகள் .

a) காசோலைகளை பணமாக்குதல். b) வருமானத்தை பெறுதல்.

c) வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களின் பல்வேறு செலுத்துக் கடமைகளை செய்கின்றது

**2. பொதுப் பயன்பாட்டுப் பணிகள்.**

கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் நோக்கில் தன்வாடிக்கையாளர்களுக்காக செய்யும் பணிகள்.

a) பாதுகாப்பு பெட்டக வசதி b) பயணக் காசோலைகள் வழங்குதல் c) அந்நியச் செலாவணியைக் கையாளுதல்.

**3. நிதியை மாற்றுதல்.** நிதியை ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு மாற்றும் பணியை மேற்கொள்கிறது.

**4. கடன் உறுதியளிப்பு கடிதம்**

வங்கிகள் வாடிக்கையாளர்களின் கடன்களுக்கான் உறுதியளிப்பு கடிதங்களை வழங்குதல்

**5 . மின்னனு வங்கி**

பற்று அட்டை கடன் அட்டை மற்றும் இணைய வழி வங்கி சேவை போன்றவற்றின் மூலம் விரைவான பண பரிமாற்றத்திற்கு உதவுகிறது.

**III. இதர பணிகள்**

**1. பண அளிப்பு**

பணப் புழக்க வேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பை அதிகரித்தல் ஆகும்.

**2. கடன் உருவாக்கம்**

மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

**3. புள்ளி விவரங்களை திரட்டுதல்**

வணிக வங்கிகள் தொழில், விவசாயம், நிதி போன்ற அடிப்படை துறைகளின் புள்ளி விவரங்களை வெளியிடுகின்றன.

A.Alexis.DDHSS.V.Pet

**37. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.**

இந்தியாவின் மையவங்கி இந்திய ரிசர்வ் வங்கி ஆகும். மைய வங்கிகளின் பணிகள் பின்வருமாறு

**1. பண அதிகார அமைப்பு.**

இது நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தை குறைக்கிறது மற்றும் வங்கிஅமைப்பை நிலைப்படுத்துகிறது.

**2. காகிதப் பண வெளியீடு.**

இது காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனமாகும். மேலும் பணம் மற்றும் கடன் அளவுகளை மேலான்மை செய்கிறது.

**3. வங்கி உரிமங்கள் வழங்குகிறது.**

வணிக வங்கிகள் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.

**4. அரசின் வங்கி.**

இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கியாகும். அரசின் நிதி தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.

**5. வங்ககளின் வங்கி**

மைய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கி ஆகும். வங்கிகளுக்கு கடன் வழங்குகிறது. மேலும் அவைகளின் வைப்புகளையும் ஏற்கிறது.

6. கடன் வழங்குவதில் கடைசி புகலிடம்

வணிக வங்கிகளுக்கு தீர்க்க முடியாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும் பொழுது, மைய வங்கி ஈட்டுக் கடனை வழங்கி உதவுகிறது.

**7. அந்நிய செலாவணி பாதுகாவலன்**

மைய வங்கி வெளிநாட்டு பண இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. மேலும் சட்டப்படியான மேலாண்மையும் செய்கின்றது.

**8. பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது.**

பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானம், செலவு, வேலைவாய்ப்பு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**38. பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ? விளக்குக.**

பணக்கொள்கையின் நோக்கங்கள்

**1. பணத்தின் நடுநிலைத் தன்மை**

பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் பணவியல் மாற்றங்கள் பொருளாதார அமைப்பில் இடையூறுகளை ஏற்படுத்தும்.

**2. விகித நிலைத்தன்மை**

பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மை ஏற்படுவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ் விகிதங்களில் நிலையற்றத் தன்மை இருந்தால் அது பன்னாட்டு வாணிபத்தை பெரிதும் பாதிக்கும்.

**3. விலையை நிலையாக இருக்கச் செய்தல்.**

விலையில் நிலைத்தன்மை, பொதுமக்களிடமும் வாணிப நடவடிக்கைகளிலும் பொதுவான நம்பிக்கையை ஏற்படுத்தும். மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இது நிலையான விலையின் பண்புகளைக் கொண்டதாக இருக்கும்.

**4. முழு வேலைவாய்ப்பு நிலையை அடைதல்**

உலகப் பெருமந்தம் வேலையின்மையை அதிகரித்தது. முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது. மேலும் கீன்சின் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப் படுத்தியது.

**5. பொருளாதார வளர்ச்சி**

நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தேவை மற்றும் அளிப்பிற்கிடையே சமநிலையை ஏற்படுத்த நெகிழ்சியுடன் கூடிய பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழி முறையாகும்.

**6. செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரித்தல்.**

பன்னாட்டு வணிபத்தில் ஏற்படும் சமனற்ற நிலை பொருளாதாரத்தை பெருமளவு பாதிக்கும் . ஆகவே பணவியல் கொள்கை செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரிப்பதை குறிக்கோளாக கொண்டிருக்கிறது.

LESSON- 7

PART-B.

**21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன ?**

பன்னாட்டுப் பொருளியல் என்பது பொருட்கள் மற்றும் பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும்.

**22. பன்னாட்டு வாணிகம் வரை விலக்கணம் தருக.**

பொருட்கள் மற்றும் பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக்கொள்வதை பன்னாட்டு வாணிகம் எனலாம்.

**23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக**

**I. திறனுடைய உற்பத்தி**

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பிட்டுத் தனிதேர்ச்சி கிடைப்பதனால் நன்மைகளைப் பெறுகின்றன

**II. நாடுகளிடையே விலை சமனடைதல்**

பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**24. பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட்ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?**

**ரிக்கார்டோ** பொருட்களை உற்பத்தி செய்ய செலவழிக்கப்படும் செலவு வேறுபாட்டை பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை என்கிறார்.

**ஆடம்ஸ்மித்**தின் கருத்தின் படி குறைந்த தனி அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகம் நடை பெறுவதற்கான அடிப்படையாகும்.

**25. வாணிப வீதத்தினை விளக்குக.**

ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்கும் . இடையே உள்ள விகிதமே வாணிப வீதம் எனலாம்

$$\text{வாணிப வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைகுறியீடு}}{\text{இறக்குமதி விலைகுறியீடு}} \times 100$$

**26. வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது ?**

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.

**27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன ?**

செலாவணி மாற்று வீதம் என்பது அயல் பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும். ஓர் அலகு அயல்நாட்டுப் பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம் என்பதே பணமாற்று வீதமாகும்.

**பகுதி – இ**

**28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக**

1. தூய வாணிபக் கோட்பாடு
2. கொள்கைச் சச்சரவுகள்
3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்
4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்

**29. இறக்குமதி பங்களவு என்றால் என்ன ?**

இறக்குமதியை கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்று இறக்குமதி பங்களவு ஆகும். பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும் இறக்குமதி அளவை நிர்ணயித்து இறக்குமதியை குறைக்கலாம்.

**30. மாறுகின்ற பண மாற்று வீதத்தின் பொருள் தருக ?**

அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதம் ஆகும். இதை மிதக்கும் பண மாற்று வீதம் என்று அழைக்கலாம்.

**31 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக**

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களை குறைத்தல்

A.Alexis.DBHSS.V.Pet

**32 . பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.**

| எண் | **தொன்மைப் பன்னாட்டு வாணிபக் கோட்பாடு** | **புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு** |
|---|---|---|
| 1 | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. | பன்னாட்டு வாணிபத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக்கோட்பாட்டைஅடிப்படையாகக்கொண்டது. |
| 2 | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும் | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3 | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தி திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடேகாரணம் எனநம்புகிறது. தயாரிக்கப்படும் அறிக்கையாகும். |

**33. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச்செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக**

| எண் | **வாணிபக் கொடுப்பல் நிலை** | **அயல்நாட்டுச்செலுத்து நிலை** |
|---|---|---|
| 1 | நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமே பரிமாறிக் கொள்ளப்படுகிறது | நாடுகளுக்கிடையே பொருட்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம் பணம் போன்றவையும் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 2 | "புலப்படும் வாணிகம்" | பொருட்கள் மற்றும் பணிகள் வாணிகம் |
| 3 | ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பையே வாணிபக் கொடுப்பல் நிலை என்கிறோம். | ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற் கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறை யில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும். |

**34. மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை சுருக்கமாக எழுதுக**

மொத்த மற்றும் நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதத்தை தாசிக் 1927ல் அறிமுகப்படுத்தினார்

**1. நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதம்**

ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கும் மிடையிலான விகிதமே நிகர பண்ட பரிமாற்று வாணிப வீதமாகும்.

**2. மொத்த பண்ட மாற்று வாணிப வீதம்**

மொத்த ஏற்றுமதி பொருட்க ளின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதி பொருட்களின் குறியீட்டெண்ணிற்குமிடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகையாக மொத்த பண்டமாற்று வாணிப வீதமாகும்.

## PART-D

**35. உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்**

| உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|
| 1. ஒரு நாட்டிற்குள் நடைபெறும் வணிகம் | 1. பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் |
| 2. உழைப்பு மற்றும் மூலதனம் தடையில்லாமல் இடம் பெயரும். | 2. உழைப்பு மற்றும் மூலதனம் இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது. |
| 3.பொருட்கள் பணிகள் இடம் பெயர்தலில் தடை இல்லை. | 3. பொருட்கள் பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி மற்றும் பங்களவு கட்டுப்படுத்துகிறது. |
| 4.வாணிபத்தில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | 4. பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது |
| 5.புவி அமைப்பு காலநிலை சூழல் ஒரே மாதிரி இருக்கும் | 5. புவி அமைப்பு காலநிலை சூழல் வேறுபடும் இயல்புடையது. |
| 6.வாணிகம் மற்றும் நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை. | 6. வாணிகம் மற்றும் நிதி நடைமுறைகள் வேறுபடும் போக்கு கொண்டவை. |
| 7.அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை. | 7.அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் அரசின் கொள்கைகளில் வேறுபாடு உ ண்டு |

A.Alexis.DBHSS.V.Pet

.

**6. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி**

டேவிட் ரிக்கார்டோ, ஒரு நாடு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கிடையே ஒப்புமை செலவு வேறுபட்டிருக்கும். குறைந்த ஒப்புமை செலவில் ஒரு பொருளை உற்பத்தி செய்யுமானால் அந்த நாடு பன்னாட்டு வாணிபத்தின் மூலம் பலனடைய முடியும்.

**எடுகோள்கள்**

1. இரண்டு நாடுகள் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றன.
2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.
3. பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

அமெரிக்கா, இந்தியா இவ்விரு நாடுகளும் இரண்டு பொருட்களை (துணி,கோதுமை) உற்பத்தி செய்கின்றன. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டால் அமெரிக்கா 200(220)அலகு உழைப்பை பயன்படுத்தி இரண்டு மீட்டர் துணி உற்பத்தி செய்து அதில் ஒரு மீட்டர் துணியை ஒரு மூட்டை கோதுமைக்கு இந்தியாவிடம் பரிமாறிக் கொள்ளலாம். இதனால் அமெரிக்காவிற்கு 20 அலகு உழைப்பு மிச்சமாகிறது

இதேபோல இந்தியா 160(170 ) அலகு உழைப்பை பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமை உற்பத்தி செய்து அதில் ஒரு மூட்டை கோதுமைக்கு ஒரு மீட்டர் துணியை அமெரிக்காவிடம் பரிமாறிக் கொள்ளலாம். இதனால் இந்தியாவிற்கு 10 அலகு உழைப்பு மிச்சமாகிறது இது பன்னாட்டு வாணிபத்தினால் கிடைத்த நன்மை ஆகும்.

**திறனாய்வு**

1., உழைப்பு செலவு அடிப்படையில் விவரிக்கப் பட்டுள்ள கோட்பாடு உண்மையை பிரதி பலிக்கவில்லை.

2. பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரேஅளவு திறன் பெற்றவர்களல்லர்.

**37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.**

**கோட்பாடு**

புதிய வாணிகக் கோட்பாட்டின் படி. 1. நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது. 2. உற்பத்திக்குத் தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது. ஆகிய இரண்டு காரணங்களால் நாடுகளுக்கிடையே ஒப்புமைச் செலவு வேறுபடுகின்றது

**எடுகோள்கள்**

1. இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்தி காரணிகளை பயன்படுத்தி இரண்டு விதமான பொருட்களை உற்பத்தி செய்கிறது .

2. சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

**விளக்கம்**

மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும். உழை ப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் தயாரிக்கப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் என ஹெக்சர் ஒலின் கூறுகிறார்கள். கீழ்க்கண்ட வரைபடம் புதிய வாணிபக் கோட்பாட்டின்படி உலக வாணிகத்தில் பொருள் கலவை எப்படி இருக்கும் என விளக்குகிறது.

A.Alexis.DBHSS.V.Pet




**குறைபாடுகள்**

1. நாடுகளில் உற்பத்தி காரணிகளின் இருப்பளவு காலத்திற்கேற்றாற் போல மாறலாம்

2. உற்பத்திக் காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடலாம்.

**38. ஜேக்கப் வைனரால் வடிவமை க்கப்பட்ட வாணிப வீத வகைகளை விவரி**

ஜேக்கப் வைனர் உற்பத்திக்காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் இரண்டு வகையான வாணிப வீதங்களை குறிப்பிட்டுள்ளார்.

**1. ஒற்றைக் காரணி வாணிப வீதம்**

ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் , இறக்குமதி விலைக் குறியீட்டெண்ணுக்கு மிடையேயான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி தொழில் துறையின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக் காரணி வாணிப வீதமாகும்.

Tf = (Px / Pm) Fx

**2 இரட்டை காரணி வாணிப வீதம்**

இந்த வீதத்தையும் வைனரே வடிவமைத்தார் . இதன் சூத்திர வடிவம் கீழ்வருமாறு

Tff = (Px / Pm) (Fx / Fm)

இங்கு Tff = இரட்டைக் காரணி வாணிப வீதம் Fm = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்திதிறன் குறியீட்டெண் .

**39. அயல் நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.**

வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டுச் செலுத்துநிலை அறிக்கையில் பதியப்படுகிறது. அவை கீழ்கண்டமூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது




**40. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.**

அயல்நாட்டுச் செலுத்து சமனற்ற நிலையின் மூன்று வகைகளை கீழ்க ண்டவாறு புரிந்துக் கொள்ளலாம்.

**1. சுழற்சி சமனற்ற நிலை .** வாணிப சுழற்சியின் விளைவாக எழும் அயல் நாட்டு செலுத்து சமனற்ற நிலையை சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம்.

**2. நீண்டகால சமனற்ற நிலை.** வளர்ச்சியின் துவக்க நிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பை விட கூடுதலாக இருக்கும். இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருக்கும்.

**3. கட்டமைப்பு சமனற்ற நிலை.**

நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல் நாட்டு செலுத்து சமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும்.

**41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.**

**பண மாற்று வீதம்**

பண மாற்று வீதத்தை அந்நிய செலாவணி மாற்று வீதம் எனவும் குறிப்பிடலாம்.

ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள மற்ற நாடுகளின் பணமே அந்நிய செலாவனி என பொருள் கொள்ளலாம்.

பணமாற்று வீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது. அவையாவன

**1) நிலையான பணமாற்று வீதம்**

ஒரு நாட்டின் அரசாங்கம் மைய வங்கியின் மூலம் பணமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பணமாற்று வீதம் என்கிறோம். பண மாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.

**2) மாறுபடும்/ நிலையற்ற பணமாற்று வீதம்.**

அந்நிய செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பண மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பண மாற்று வீதம் ஆகும். இதை மிதக்கும் பண மாற்று வீதம் என்று அழைக்கலாம்.

**42. பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.**

பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு.

1. பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அன்னிய நேரடி முதலீடு முக்கிய பங்கு வகிக்கிறது.
2. வளரும் நாடுகளின் இயற்கை வளங்கள் மற்றும் தோட்டப்பயிர் துறைகளில் மிக அதிக அளவு வெளிநாட்டினர் முதலீடு செய்து பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தனர் .
3. வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் இயந்திரங்கள், தொழில்நுட்பம், இடு பொருட்கள் மற்றும் அரிதான நுகர்வு பொருட்கள் போன்றவையும் ஒரு நாட்டுக்குள் வரும்.
4. அந்நிய செலாவணி பற்றாக்குறையை போக்குதல், வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல் போன்ற காரணங்களுக்காகவும் வெளிநாட்டு நேரடி முதலீடு விரும்பப்படுகிறது
5. லாபத்தின் ஒரு பகுதியை மறுமுதலீடு செய்வதன் மூலம் தொழில்வளம் பெருகும்
6. புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்
7. ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தை குறைத்து அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்கும்
8. போட்டியை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையை தகர்க்கும்
9. உள்நாட்டு துணைத் தொழில் நிறுவனங்கள் வளரவும், வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து உள்நாட்டு சிறுதொழில்கள் வளரவும் உதவும்.
10. உள்நாட்டுத் தொழில் முனைவோர்களை வெளிநாட்டு மூலதனம் மற்ற நாடுகளில் முதலீடு செய்ய தூண்டுகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

## 8. பன்னாட்டு அமைப்புகள்.

PART-B

**21. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.**

பன்னாட்டு நீர்மைத் தன்மையைஉருவாக்க 1969 ல் நிதியம் பன்னாட்டு பண இருப்புகளை ஏற்படுத்தியது. இதன் மூலம் சிறப்பு எடுப்புரிமைகள் பன்னாட்டு மதிப்பளவையாகவும் செலுத்து நிலையாகவும் செயல்படுகின்றது.

**22. ஆசியானின் இரண்டு நோக்கங்களை குறிப்பிடுக.**

(i) பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது.

(ii) ஐநா சபையின் கொள்கை களைக்கடைபிடித்து தென் கிழக்காசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது.

**23. ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக்காட் டுக**

i) வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது

ii) கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது
iii) ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்றுத் தருவது

**24. பொது சந்தை வரையறு.**
புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம் மற்றும் உற்பத்திக்காரணிகள் இடப் பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொது சந்தை. உதாரணம்: ஐரோப்பிய பொது அங்காடி.

**25. தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன ?**
ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது

**26. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது ?**
நேப்பாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமை அலுவலகம் ஆகும். ஜனவரி 16, 1987 முதல் செயல்படத் தொடங்கியது.

**27. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக.**
**1.** பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு **2.** பன்னாட்டு நிதிக் கழகம்
**3.** பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை

**பகுதி – இ**

**28. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.**
நாடுகளுக்கிடையே சுமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன.
சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் தடையற்ற வாணிகப்பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம், பொது சந்தை மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**29. வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன ?**
சிலநாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதாரத்துடன் தங்களுடையப் பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.நாடுகளுக்கிடையே சுமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன. சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் தடையற்ற வாணிகப்பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம், பொது சந்தை மற்றும் பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது

**30. ஐஎம்எப் – ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை குறிப்பிடுகக்.**
**1. அடிப்படைக் கடன் வசதி** தற்காலிக அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றாக்குறை பிரச்சனையை தீர்க்க இக்கடன் வழங்கப்படுகிறது.
**2. விரிவாக்கப்பட்ட கடன் திட்டம்** அடிப்படைக் கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம்.
**3. ஈடு செய் கடன்திட்டம்** குறைவான ஏற்றுமதி வருவாய் ஈட்டும் முதன்மைத் துறை பொருளுற்பத்தியை சார்ந்திருக்கும் நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடு செய்கடன்திட்டமாகும்.

**31. பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன ?**

பலதரப்பு வாணிக ஒப்பந்தம் :– பன்னாட்டு வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு வழக்கமாக தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுபவர்கள்.

**32 பிரிக்ஸ் மாநாடு 2018 ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.**

பத்தாவது உச்சி மாநாடு தென்ஆப்பிரிக்காவில் ஜீலை 2018 ல் நடை பெற்றது. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனை கள், உலகளாவிய அரசு நிர்வாகம், பகிரத்தக்க வளமை , நாடுகளின் அமை தி மற்றும்பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

**33. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.**

சார்க் அமைப்பின் பணிகள்

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்
4. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது
5. பயங்கரவாத செயல்களைத டுப்பது.

**34. ஆசியான் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.**

1. ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்கிடையில் தடையற்ற பொருள், பணிகள் மற்றும் மூலதன போக்குவரத்துக்கான வழி முறைகளை உருவாக்கும் பணியை செய்கிறது.
2. ஒரு உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற எல்லா உறுப்பு நாடுகளிலும் விற்க தடையற்ற அனுமதி அளிக்கும் பணியையும் செய்கிறது.
3. உறுப்பு நாடுகளுக்கு சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பெற்றுத் தருவது.
4. தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பலதுறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

A.Alexis.DBHSS.V.Pet

பகுதி – ஈ

**35. பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.**

1. உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டு பரிவர்த்தனையில் பணவியல் ஒத்துழைப்பைப் மேம்படுத்துவது
2. பன்னாட் டு வாணிபம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.
3. உறுப்பு நாடுகளின் நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச்செய்தல்.
4. உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவனிக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
5. வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது.
7. பன்னாட்டு நீர்மைப் பிரச்சனைக்கு தீர்வு கானுதல்.

**36. உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.**

**உலக வங்கியின் பணிகள்**

**1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி**

உறுப்பு நாடுகளின் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கிறது

**2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி.** இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சம நிலையை அடையும்.

**3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குவது** ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

**4. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்.** இந்தப் பணியின் மூலம் கடன்நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.

**5. தொழில் நுட்ப சேவைகள்.** நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

**37. குறிப்பு எழுதுக அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்**

**அ) சார்க்**

தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பிற்காக துவக்கப்பட்ட அமைப்பாகும் . வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேப்பாளம், பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை சார்க் நாடுகளக்கும். .

தெற்காசிய மண்டலத்தின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை துக்ச்தப்படுத்துதல், மக்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்துதல். ஆகியவை இதன் நோக்கமாகும். உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல், வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது பயங்கரவாத செயல்களை தடுப்பது ஆகியவை இதன் பணிகளாகும்.

தெற்காசிய மேம்பாட்டு நிதியம் என்ற அமைப்பைத் துவக்கியது இதன் சாதனையாக கருதலாம்.

**ஆ) ப்ரிக்ஸ்**

**பிரிக்ஸ் நாடுகள்** பிரேசில்– ரஷ்யா –இந்தியா– சீனா – தெற்கு ஆப்ரிக்கா.

பிரிக்ஸ் நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 சதவீதம் பெற் றுள்ளன.

கடந்த 15 ஆண்டுகளில் உலக GDP ல் தனது பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உலக மக்கள் தொகை யில் பிரிக்ஸ் 43 சத வீதத்தை இருப்பிடமாக கொண் டுள்ளது. வணிக ஒத்துழைப்பை மேம்படுத்துதல். வளரும் நாடுகளுக்கென வாணிக ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கி அவற்றை ஒன்றிணைந்து செயல்பட வைப்பது. ஆகியவை இதன் நோக்கமாகும். வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கிடையிலான இடைவெளியை குறைக்கும் பணிகளையும் செய்கிறது. தகவல் பகிர்ந்து கொள்ளுதலுக்கான ஒரு தளமாகவும் பிரிக்ஸ் பணியாற்றுகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**38. இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ – ன் பங்கினை விவாதிக்க.**

**1.** 1995ஆம் ஆண்டில் GATT ஆனது உலக வர்த்தக அமைப்பு என உருவானது.

**2.** இறக்குமதி வரிகுறைக்கப்பட்டதால் உதிரி பாகங்கள் மற்றும் இயந்திரங்கள் குறைவான விலையில் கிடைத்துள்ளது.

**3.** குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.

**4.** பன்னாட்டு பரிவர்த்தனை தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

**5.** விரிவு படுத்தப்பட்ட சந்தை தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்

**6.** நாடுகளிடையே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது

## 9 . நிதிப் பொருளியல்

PART-B.

**21. பொது நிதி வரையறு.**

அரசின் வருவாய் மற்றும் செலவினங்களின் இயல்பையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்.

**22. பொது வருவாய் என்றால் என்ன ?**

பொது வருவாய் என்பது அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்

**23. வரி, கட்டணம் வேறுபடுத்துக.**

வரி என்பது எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அரசிற்கு கட்டாயமாக செலுத்தக்கூடியதாகும். கட்டணம் என்பது கட்டாயமாக செலுத்தக்கூடியது அல்ல. அரசானது சில சேவையைச் செய்வதற்காக வசூலிப்பதே கட்டணம் ஆகும். எ.கா. ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்காக வசூலிப்பதே கட்டணம் ஆகும்.

**24. பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம் குறிப்பு வரைக.**

இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாக கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும். இந்திய அரசு 1987–88 இல் இத்திட்டத்தை தாக்கல் செய்தது.

**25. நேர்முக வரிக்கு இரண்டு உதாரணங்கள் தருக.**

நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ் வரியைச் செலுத்தவேண்டும் உதாரணம் வருமான வரி , சொத்து வரி,வெகுமதி வரி.

**26. GST யின் கூறுகள் யாவை ?**

GST யின் கூறுகள்

1. CGST,
2. SGST,
3. IGST,

**27. பொதுக் கடன் என்பதன் பொருள் யாது. ?**

அரசு பெறும் கடன்களுக்குப் பொதுக் கடன் என்றும் கூறுவர்."

A.Alexis.DBHSS.V.Pet

## PART-C

**28. வரி விதிப்பு விதிகளை விவரிக்க.**

வரி என்பது எவ்வித நன்மையும் எதிர்பாராமல்,அரசுக்கு கட்டாயமாக செலுத்துவது ஆகும்

**1. செலுத்தும் திறன் பற்றிய விதி.** ஒருவன் தன் வரி தாங்கு திறனுக்கு ஏற்ப வரி செலுத்துவது ––ஏழைக்கு குறைவாகவும், பணக்காரர்களுக்கு அதிகமாகவும் விதிப்பது.

**2. நிச்சயத் தன்மை விதி.** குடிமகன்செலுத்தவேண்டிய வரியின் அளவு எப்பொழுது யாரிடம் செலுத்தவேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

**3. வசதிவிதி.** வரி செலுத்துதல் வசதியாகவும் சுமை இல்லாததாகவும் இருத்தல்வேண்டும்.
(எ.கா)வருமானவரி சம்பளத்தில் பிடித்தம்

**4. சிக்கனவிதி.** வரி விதிப்பிலும் வசூலிப்பதிலும் அதிக பணம் வீணாகாமல் இருக்கவேண்டும்

**29. தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.**

**1. பகுத்தறியும் தன்மை.** பொது மற்றும் தனி நிதி இரண்டும் குறைந்தசெலவில்அதிக நலத்தைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. கடனுக்கான வரையறை.** இரண்டுக்குமான கடன்கள் வரையரைக் கொண்டுள்ளது. அரசின் பற்றாக்குறை வரவு செலவு, திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.

**3. நிர்வாகம்.** நிர்வாகத் திறனானது அரசு மற்றும் தனியாரின் செயல்திறனைப் பொருத்து அமைகிறது.

**30. நவீனஅரசின் பணிகள் யாவை ?**

**1. சமூக நலன்.** நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூக பாதுகாப்பு போன்றவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

**2. பாதுகாப்பு.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணியாகும்.

**3. நீதி.** நீதியை பரிபாலனம் செய்தல் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல் ஆகியவை அரசின் பணியாகும்.

**4. நிறுவனங்கள்.** தனி நிறுவனங்கள் மீதான ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தற்காலஅரசின் பணியின் கீழ் வருகிறது.

**31. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக**

.1. வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தப்படக்கூடிய ஒன்றாகும்.

2. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

3. வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத் தொகை போன்று விதிக்கப்படுவதல்ல.

**32. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| 1. நேரிடையாக வரி விதிக்கப்படுகிறது | பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது |
| 2. சுமை ஒருவரையே சாரும் | சுமை பல்வேறு நபர்கள் மீது விழும் |
| 3. வரி ஏய்ப்பு உண்டு | வரி ஏய்ப்பு இல்லை |

**33. முதன்மைப் பற்றாக் குறை என்றால் என்ன ?**

**முதன்மைப் பற்றாக்குறை**

1. இது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறை யாகும்.

2. இது அரசின் உண்மையான சுமையை காட்டும்.

3. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.

4. நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக் குறையைவிட அதிகமாக இருக்கும்.

A.Alexis.DBHSS.V.Pet

**34. பொதுக் கடனை திரும்ப செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.**

**1. வட்டி வீதத்தை குறைத்தல்** கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை செலுத்துவதும் ஒரு வகையானகடன் தீர்வு முறையாகும்

**2. வரவு செலவு திட்ட உபரி** பொது வருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது. அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

PART-D

**35. பொது நிதியின் எல்லைகளை விளக்குக.**

**வரைவிலக்கணம்.** அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும். கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்.–ஆடம் ஸ்மித்

**பொது நிதியின் எல்லை**

**1. பொது வருவாய்.** பொது வருவாய் என்பது வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியும் விளக்குகிறது.

**2. பொதுச் செலவு.** பொதுச் செலவு என்பது அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் கட்டுப்ப டுத்துதல் ஆகியவற்றையும் விளக்குகிறது.

**3. பொதுக் கடன்** பொதுக் கடன் என்பது அரசின் கடன். இதில் பொதுக் கடன்களின் சுமை, அதன் விளைவுகள் மற்றும் திரும்பச்செலுத்தும் முறைபற்றி விளக்குகிறது.

**4. நிதி நிர்வாகம்.** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி விளக்குகிறது. வரவு செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது

**5. நிதிக் கொள்கை.** வரிகள், மானியங்கள், பொதுக்கடன் மற்றும் பொதுச்செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

**36. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை ?**

மறைமுக வரிகளின் நன்மைகள்

**1. பரந்து கணப்படுதல்.** எல்லா நுகர்வோர்களும் மறைமுக வரிகளை செலுத்தவேண்டும். இதனால்தான் நேர்முக வரிகளைவிட மறைமுக வரிகள் அதிக நபர்களைஉள்ளடக்கியுள்ளது.

**2. சமத்துவம்.** பணக்காரர்களால் பயன்படுத்தப்படக் கூடிய ஆடம்பர பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில்அமைகிறது

**3. சிக்கனத் தன்மை.** உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாகிறது.

**4. உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வை குறைக்கிறது**

அரசானது உடலுக்கு தீங்கு விளைவிக்ககூடிய பொருட்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது. எடுத்துக்காட்டாக புகையிலை, மது போன்றபொருட்கள் மீதானவரி. இது பாவ வரி எனஅழைக்கப்படுகிறது.

**5. வசதியானது.** மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது. . விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

**37. கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.**

**1. மூழ்கும் நிதி :** கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை 'மூழ்கும் நிதி' என்பர்

**2. வட்டி வீதத்தை குறைத்தல் :** கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை செலுத்துவதும் ஒரு வகையானகடன் தீர்வு முறையாகும்

**3. வரவு செலவு திட்ட உபரி :** பொது வருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது. அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

**4. கடனை மாற்றுதல்:** இம்முறையில் பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுகிறது. டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

**5. பகுதியாகச் செலுத்தல் :–**இந்த முறையின் கீழ் அரசு பொதுக் கடனை தவணைகளாக செலுத்துகிறது. இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக சுலபமான முறையாகும்.

**6. கடன் மறுப்பு:** அரசு ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும். இது கடனை திரும்ப செலுத்துவதாகாது, அதனை அழிப்பதாகும்.

A.Alexis.DBHSS.V.Pet

**38. நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை ? விளக்குக.**

நிதிக் கருவிகள்

1. அரசின் செலவுகள்,
2. வரிவிதிப்பு மற்றும்
3. கடன் பெறுதல் போன்றவை நிதிக் கருவிகள் ஆகும்.

**1. அரசின் செலவுகள் :** கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும் போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது. ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கம் மற்றும் பணவீக்கத்தை கட்டுப்பப்படுத்த உதவுகிறது

**2. வரிவிதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தை குறைக்கிறது. எனவே பணவீக்கத்தை கட்டுப்பப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும் .

**3. கடன் பெறுதல்:** அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. அது பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப் படுகிறது.

**39. கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.**

கூட்டாட்சி நிதியில் கீழ்க்காணும் முக்கிய கொள்கைகள் பின் பற்றப்படுகின்றன.

**1. சுதந்திரம்:** கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசும் தன்னனுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்கவேண்டும்.

**2. சமத்துவம் :** சமத்துவ நீதியின் அடிப்படையில், வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்

**3. ஒரே மாதிரியான தன்மை:–** கூட்டரசு முறையில், ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்**தல்களை செய்ய வேண்டும்**

**4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல் :** மத்திய மற்றும் மாநிலஅரசுகள், அவற்றின் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

**5. நிதி வசதி:** அரசின் பெருகி வரும் பொறுப்புகளுக்கேற்றவாறு வளங்களை வளர்த்து கொள்ள வேண்டும்.

**6. ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றுபடுதல் :–** அனைத்து நிதி முறைகளும் முழுவதும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்

**7. செயல்திறன்:** நிதி முறைகளை திறமையான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். ஏய்ப்பு மற்றும் மோசடிக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது.

**40. வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பல வகை பற்றாக்குறைகளை விளக்குக.** பற்றாக்குறை என்பது, வருவாய் செலவை விட குறைவாக இருப்பப்பதாகும். நான்கு வகையான பற்றாக்குறைகள் உள்ளன.

**1. வருவாய் பற்றாக்குறை:** அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவை விட அதிகமாக இருந்தால் அது வருவாய் பற்றாக்குறை எனப்படும்.

**2. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை:** மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாகும்.

**3. நிதிப் பற்றாக்குறை:** நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவு பற்றாக் குறையை விட அதிகமானதாகும்.

**4. முதன்மைப் பற்றாக்குறை:** முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்தபின் உள்ளபற்றாக் குறையாகும்.

A.Alexis.DBHSS.V.Pet

**41. அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை ?**

அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள்.

**1. மக்கள் தொகை வளர்ச்சி:** மக்கள் தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு செய்யவேண்டியிருக்கிறது. இதனால் பொதுச்செலவு அதிகமாகிறது.

**2. பாதுகாப்புச் செலவு :** இந்தியாவில் பாதுகாப்பிற்கான செலவு அதிகரித்த வண்ணம் உள்ளது.

**3. அரசு மானியங்கள்:** இந்திய அரசானது, மானியங்களுக்காக வழங்கும், தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

**4. கடன் சேவைகள்:** அரசானது அதிகமான அளவில் கடன் பெற்றுள்ளன. கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது..

**5. நகரமயமாக்கல்:** நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இதனால் சட்ட ஒழுங்கை பராமரிப்பதற்கு, கல்வி மற்றும் குடிமை வசதிகளை மேற்கொள்ள அதிக அளவில் செலவுகள் ஏற்படுகின்ற து.

**6. தொழில்மயமாக்கல்:** அடிப்படை மற்றும் கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது. இதனால் பொதுச்செலவு அதிகமாகிறது.

**பாடம் :10**

**பகுதி.அ**

**21.சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.**

சுற்றுச்சூழல் என்பது நம்மை சுற்றியுள்ள காற்று நீர் , நிலம், இயற்கை வளங்கள், வனங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்கள் அடங்கும் தொகுப்பு ஆகும். மேலும் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பையும் குறிக்கும்.

**22.சூழலியல் என்றால் என்ன ?**

உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும் அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றி படிக்கும் இயல் ஆகும்.

**23.தலா கரியமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை ?**

1.கனடா 2. அமெரிக்க ஐக்கிய நாடுகள் 3.தென் கொரியா 4.சவுதி அரேபியா 5.ஆஸ்திரேலியா

**24.சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் என்ன ?**

தனியாார் சொத்துரிமை இல்லாத பொதுவாக அனைவராலும் பயன்படுத்தும் பொருட்களையே சுற்றுச்சூழல் பொருட்கள் என்கிறோம். எ.கா .தூய்மை காற்று, ஆறுகள், மலைகள், பசுமை வழிகள், பொது பூங்காக்கள்.

**25.ஒலிமாசுவினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கூறுக.**

1.ஒலித்தடைகளை ஏற்படுத்ததல் 2. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு 3.ஒலி பெருக்கிகளை கட்டுப்படுத்துதல் 4. கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தை கட்டுப்படுத்துதல் 5.வேலை செய்யும் இடத்தில் ஒலித்தடுப்பானை நிறுவுதல் 6. தரை போக்குவரத்திற்கு புதிய சாலைகளை அமைத்தல்.

**26.உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.**

நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்பநிலையே புவி வெப்பமயமாதல் என்கிறோம். கரியமில வாயு, மீத்தேன், குளோரோ புளோரோ கார்பன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமைகுடில் வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது.

A.Alexis.DBHSS.V.Pet

**27.விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.**

ஒரு விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்த மண் உரம் கலந்த களிமண் ஆகும். பிறகு அது உலர்த்தப்பட்டு பின்பு எங்கு வேண்டுமோ அங்கு விதைக்கப்படுகிறது.இது களிமண்ணோடு சேர்த்து பந்து போல் உருட்டப்படுவதால் இதை விதைப்பந்து என்று அழைப்பர்.

**பகுதி.ஆ**

**28.பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.**

சமூக அரசியல் அறிவியல் தத்துவ மற்றும் பொருளாதார அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கிறது. மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும் உயிரற்ற பொருட்களுடனும் இணைந்து உள்ளதால் அவனது வாழ்க்கையை சுற்றுச்சூழலே பெருமளவு தீர்மானிக்கிறது.

**29.பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.**

இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல் விதியை ஆதாரமாக கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்பை விளக்குவதுதான் பொருள்சார் சமநிலை அணுகுமுறை எனப்படும்.

**30.பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.**

சுற்றுச்சூழல், தாவரங்கள், உயிரிகள் மற்றும் மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் அளவிற்கு காற்று மண்டலத்தில் திட, திரவ, வாயு பொருட்கள் கலந்திருப்பதையே காற்று மாசுபடுதல் என்கிறோம்.

**வகைகள்**

**1.உட்புற காற்று மாசு.** மனிதர்கள் வசிப்பிடத்தில் தோன்றும் காற்று மாசுபாடு உட்புற காற்று மாசு எனப்படும்.

**2.வெளிப்புற காற்று மாசு.** காற்று மண்டலத்தில் கலந்திருப்பதையே வெளிப்புற காற்று மாசு என்கிறோம்.

**31.நீர் மாசுக்கான காரணங்கள் யாவை ?**

1.கழிவு நீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்.
2.திடக்கழிவுகளை கொட்டுதல்
3.ஆலைக்கழிவுகளை கொட்டுதல்
4.எண்ணெய் சிந்துதல்
5. அமில மழை
6.புவி வெப்பமடைதல்
7.நீர் நிலைகளில் பிராணவாயு குறைதல்

**32.இ–கழிவுகள் என்றால் என்ன ?**

பயன்படுத்த இயலாத மின்னணு சாதனங்கள், இ–கழிவுகள் அல்லது மின்னணு கழிவுகள் எனப்படும். எ.கா. கணிணிகள் , தொலைக்காட்சி பெட்டிகள், கைபேசிகள்

**33.நில மாசு என்றால் என்ன ? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.**

திறந்தவெளியில் கொட்டப்படும் பல திட திரவ வாயுப்பொருட்கள் காரணமாக நிலத்தின் தன்மை கெடுதல் நிலமாசு எனப்படும்.

**காரணங்கள்**

1.காடுகளை அழித்தல் 2.சுரங்கத் தொழில்கள் 3.தொழிற்மயமாதல் 4. அணுமின் விரயங்கள்
5.விவசாய நடவடிக்கைகள் 6. மண்ணில் புதைத்தல் 7.கட்டுமானப் பணிகள்

A.Alexis.DBHSS.V.Pet

**34.குறிப்பு வரைக. (அ) பருவநிலை மாற்றம் (ஆ) அமில மழை**

**(அ) பருவநிலை மாற்றம்**

வளிமண்டலத்தில் பசுமைக்குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்து கொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாற்றங்களே காலநிலை மாற்றம் எனப்படும்.

**(ஆ) அமில மழை**

தொழிற்சாலைகள் வாகனங்கள் கொதிப்பான்கள் போன்றவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ள நீர்த்துகள்களோடு இணையும் போது ஏற்படும் மாற்றமே அமில மழை எனப்படும்.

## பகுதி–ஈ

**35.மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.**

சுற்றுச்சூழல் பொருளியல் என்பது மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இயற்கை சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பாகும்.மனிதன் தன் வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களுடன் இணைவதால் அவனது வாழ்க்கை முறையை சுற்றுச்சூழலே தீர்மானிக்கிறது.

உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆக வேண்டும். உற்பத்திக்கு ஆதாரம் இயற்கையே ஆகும். இயற்கையில் எடுக்கப்படும் மூலப்பொருட்கள் உள்வருவதும் அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வுத்துறைக்கு செல்வதும் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகிறது.

மனிதன் மற்றும் இதர உயிரினங்களின் மீது பாதிப்பை ஏற்படத்துவதால் சுற்றுச்சூழல் தரம் கவனிக்கப்பட வேண்டும். முதலாளித்துவ செயல்முறைகளினால் சுற்றுச்சூழல் தரம் சரிந்து கொண்டே வருகிறது. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. பொருள்சார் சமநிலை அணுகுமுறை வகுத்துள்ளனர்.




**36.புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.**

**புற விளைவுகள் பொருள்.**

ஒருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தி சம்மந்தமில்லாத மூன்றாம் தரப்பிலான மற்றொருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தியை பாதகமாக பாதிப்பது புற விளைவுகள் எனப்படும்.

**இலக்கணம்**

"தனி நபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக அந்த நடவடிக்கைகளின் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கு பெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்.

**புறவிளைவின் வகைகள்**

**1.நுகர்ச்சி அடிப்படையில்**

**நேர்முக நுகர்ச்சி புறவிளைவு**

**எதிர்மறை நுகர்ச்சி புறவிளைவு**

ஒருவருடைய நுகர்ச்சி சார்பு மற்றவரின் நுகர்வு சார்பில் சாதகமான விளைவு ஏற்படுத்துதல்.எ.கா.ஓர் நகரில் ஒரு சிலர் செய்யும் தனியார் பாதுகாப்பு மற்றவருக்கும் பாதுகாப்பாய் அமைவது.

A.Alex's DBHSS.V.Pet

ஒருவருடைய நுகர்ச்சி சார்பு மற்றவரின் நுகர்வு சார்பில் பாதகமான விளைவு ஏற்படுத்துதல்.

எ.கா. ஒலி பெருக்கி மூலம் சத்தமாக பாடல் கேட்கும்போது அண்டை வீட்டுக்காரர் ஒலி மாசால் பாதிப்படைகிறார்

**2.உற்பத்தி அடிப்படையில்**

**நேர்முக உற்பத்தி புறவிளைவு**

ஒருவருடைய உற்பத்தி சார்பு மற்றவரின் உற்பத்தி சார்பில் சாதகமான விளைவு ஏற்படுத்துதல்.

எ.கா.தேனி வளர்க்கும் விவசாயி பழமரங்களை வளர்க்கும் அண்டை விவசாயிக்கு தேனி மேற்கொள்ளும் மகரந்த சேர்க்கை மூலம் நேர்மறை புற விளைவை ஏற்படுத்துகிறார்.

**எதிர்மறை உற்பத்தி புறவிளைவு**

ஒருவருடைய உற்பத்தி சார்பு மற்றவரின் உற்பத்தி சார்பில் பாதகமான விளைவு ஏற்படுத்துதல்.

எ.கா.சிமென்ட் தொழிற்சாலை மூலம் வெளிவரும் காற்று மாசுபாட்டினால் அருகிலுள்ள விவசாயிகளின் நெல் விளைச்சல் பாதிக்கப்படுகிறது.



**37.நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.**

**நீடித்த நிலையான மேம்பாடு:**

இப்போதுள்ள சந்ததியினருக்கு மட்டுமின்றி எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்கு தேவையான வளத்தை வைத்து விட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்.

**வளம் குன்றா வளர்ச்சி:**

பொருளாதார வளர்ச்சி சமூகச் சேர்ப்பு மற்றும் சுற்றுபுறம் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய குறிக்கோள்களையும் சேர்த்து சாதிப்பததான் நீடித்த நிலையான வளர்ச்சி அல்லது வளம்குன்றா வளர்ச்சி எனப்படும்.

**நோக்கங்கள்:**

1.வறுமையற்ற நிலையை உருவாக்குதல்.

2.பட்டினி இல்லா ஊட்டச்சத்து உயர்ந்த சமுதாயம் உருவாக்குதல்.

3.சிறந்த உடல் நலமுள்ள சமுதாயம்.

4.தரமான கல்வி அனைவருக்கும் தருதல்.

5.பாலின சமன்பாட்டை சாதித்தல்.

6.தூய்மையான குடிநீர் மற்றும் துப்பறவு.

7.அனைவருக்கும் தூய்மையான மற்றும் மலிவான ஆற்றல்.

8.நல்ல வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளா;ச்சி

9.தேவையான கட்டமைப்பு வழங்கல் மற்றும் புத்தாக்கம் புனைதல்.

10.ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.

**பாடம்:11. பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்**

**பகுதி.அ**

A.Alexis.DBHSS.V.Pet

**21.பொருளாதார முன்னேற்றம் வரையறு:**

' முன்னேற்றத்தை சமூக அமைப்பு பொது மக்களின் மனநிலை மற்றும் நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் மற்றும் விரைவான வளர்ச்சி வருவாய் ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதார முன்னேற்றமாக கருத வேண்டும் " என்கிறார் மைக்கேல் பி.டொடாரோ.

**22.பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.**

1. நாட்டின் மொத்த உற்பத்தி 2. தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி
3. நலன் 4. சமூகக் குறியீடுகள்

**23.பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.**

**பொருளாதார வளர்ச்சி:**

1.வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது.

2.மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது.

**பொருளாதார முன்னேற்றம்**

1.வளரும் நாடுகளின் பிரச்சனைகளை கையாளுகிறது.

2.தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கிறது.

**24.மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன ?**

ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்தை சேர்த்தால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனப்படும்.

**25.பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.**

பொருளாதார திட்டமிடல் என்பது தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்—ராபின்ஸ்

**26.பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக.**

மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதே சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. எ.கா. சுகாதாரம் ,கல்வி, உணவு, குடிநீர்.

**27.நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.**

திட்டக் குழுவிற்கு பதிலாக ஜனவரி 1 , 2015 அன்று உருவாக்கப்பட்டதே நிதி ஆயோக் ஆகும். இதன் தலைவர் இந்திய பிரதமர்.

**பகுதி-ஆ**

**28.வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.**




வறுமையின் நச்சு சுழல் அளிப்பு மற்றும் தேவை இரு பக்கத்திலிருந்து செயல்படுகிறது.அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால் குறைவான சேமிப்பு காரணமாக முதலீடு குறைகிறது. இதன் காரணமாக மூலதன பற்றாக்குறை ஏற்படுகிறது. தேவை பக்கத்திலிருந்து பார்த்தால் குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும்.

A.Alexis.DBHSS.V.Pet

**29.பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை ?**

**பொருளாதாரம் சாராத காரணிகள் என்பவை**

1.மனித வளம்
2.தொழில் நுட்ப அறிவு
3.அரசியல் சுதந்திரம்
4.சமூக அமைப்பு
5.ஊழலற்ற நிர்வாகம்
6. முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்
7. நீதி போதனை அறநெறி மற்றும் சமூக விழுமியங்கள்
8. சூதாட்ட முதலாளித்துவம்
9. பரம்பரை சொத்துமை முதலாளித்துவம்

**30.வறுமையின் நச்சு சுழற்சியை எப்படி தடுப்பது ?**

தேவை பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சியை உடைத்தெரிய நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார்.ஒரே நேரத்தில் பலவகை தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலார்களுக்கு அந்த தொழில்களில் வேலை கிடைக்கும். அவர்கள் மற்ற தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுகிறார்கள்.அளிப்பு பக்கத்தில் இச்சுழற்சியை உடைத்தெரிய ஒரு நாடு கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.

**31. இந்திய பொருளாதார திட்டமிடலின் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.**

உயர்திரு.எம்.விஸ்வேஸ்வரய்யா.(1934) இவர் இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார்.

ஜவஹர்லால் நேரு(1938) இவர் தேசிய திட்டக்குழு ஒன்றை அமைத்தார்.

பாம்பே திட்டம்(1940) மும்பையில் முன்னனி தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் என்ற திட்டத்தை 1938—ல் முன் மொழிந்தனர்.

எஸ்.என்.அகர்வால்(1944) இவர் காந்தியத் திட்டத்தை வழங்கினார்.
எம்.என்.ராய்(1945) மக்கள் திட்டத்தை வடிவமைத்தார்.

**32.திட்டமிடுதலுக்கு ஆதரவான கருத்துக்களை விவரி.**

1.வேலையின்மையை அகற்றுதல்
2.சமமான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்
3.திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்
4.நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கி விடுதல்

**ஆர்தர் லூயிஸ்:** பின்தங்கிய நாடுகளின் தேசிய வருவாயை உயர்த்துவதற்கான ஒருங்கினைந்த முயற்சிகள் மிகவும் அவசியம்.இதற்கு திட்டமிடல் என்பது வழிகளையும் வழிமுறைகளையும் கொண்ட ஒரு சாதனமாக திகழ்கிறது.

**33.செயல்பாட்டு திட்டமிடலுக்கும் அமைப்புமுறை திட்டமிடலுக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதுக.**

**செயல்பாட்டு திட்டமிடல்**

ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல் மட்டுமே செய்யும் திட்டமிடுதல்

**அமைப்புமுறை திட்டமிடல்**

பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்பு திட்டமிடலாகும்.

A.Alexis.DBHSS.V.Pet

**34. நிதி ஆயோக்கின் பணிகள் யாவை ?**

. கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி
. பரவலாக்கப்பட்ட திட்டமிடல்
. தொலைநோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்
. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
. சச்சரவு தீர்த்தல்
. வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்
. கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்

**பகுதி–ஈ**

**35.பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்**

**பொருளாதாரம் சார்ந்த காரணிகள்**

**1.இயற்கை வளங்கள்.**ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்னயிக்கும் காரணியாகும்.வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடு விரைவாக முன்னேற இயலாது.

**2.மூலதன உருவாக்கம்.** ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம் என்பர்.

**3.சந்தையின் அளவு.** சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி அதிக வேலைவாய்ப்பு மற்றும் தேசிய தலா வருமான உயர்வு ஆகியவற்றை தூண்டும்.

**4.கட்டமைப்பு மாற்றம்.** கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தை குறிக்கும்.

**5.நிதியியல் முறை.** நிதியியல் முறை என்பது ஒரு நாட்டில் திறமையான மற்றும் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறையினை கொண்டதாகும்.

**6. விற்பனைக்குரிய உபரி.** வேளாண்துறையில் குடும்பத்திற்கான நுகர்வு தேவையை விட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம்.

**36. பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி**

**திட்டமிடுதலின் வகைகள்**

**1. மக்களாட்சி திட்டமிடுதல்**

திட்டமிடுதலின் அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் முறையே மக்களாட்சி திட்டமிடுதல் ஆகும்.

**2. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல்.**

திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் .இது மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல்ஆகும்.

**3. வழிகாட்டும் திட்டமிடுதல்**

வழிகாட்டும் திட்டமிடுதல் என்பது திட்டக்குழுவின் வழிகாட்டுதலின்படி, முன்பே முடிவு செய்யப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படுதல் ஆகும்.

**4. சுட்டிக்காட்டும் திட்டமிடுதல்**

அரசு திட்டமிடுதலின் இலக்குகளை நிர்ணயித்து அதை தனியார் நிறுவனங்கள்அடைவதற்கு தேவையான வசதிகளை செய்து தருவதாகும்.

**5. விரிவான மற்றும் பகுதித் திட்டமிடுதல்.**

நாட்டின் அனைத்து பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடுதலாகும்.ஒரு சில துறைகளுக்கு மட்டும் இலக்குகள் நிர்ணயித்து அதை அடைய தீட்டப்படும் திட்டங்கள் பகுதித் திட்டமிடுதல்.ஆகும்.

**37.திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்**

திட்டமிடலுக்கு எதிரான வாதங்களையும் குறைகளையும் கீழே புரிந்து கொள்வோம்

**1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை: .** திட்டமிடல் பொருளாதாத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக் குழு எடுக்கிறது. இது நுகர்வோர்,உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களை கட்டுப்படுத்துகிறது.

**2. தன்முனைப்புக்குறைதல்:** மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது.

**3. அதிகமான நிர்வாக செலவு:** திட்டமிடலின் நோக்கம் தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையை சமப்படுத்துதல் போன்றவை அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனை விட அதிகமாக இருக்கும்.

**4. முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்:–** திட்டமிடல் நாடுகளில் நுகர்வு மற்றும் உற்பத்தி அளவினை நிர்ணயிப்பது கடினம்

## பாடம்–12

## பகுதி–ஆ

**21.புள்ளியியல் என்றால் என்ன ?**

புள்ளியியல் என்பது எண்ணிலான விவரங்களைத் திரட்டி ஒருங்கினைத்து வழங்கி பகுத்தாய்ந்து விவரிப்பது ஆகும்.

**22.புள்ளியியலின் வகைகள் யாவை ?**

1. விவரிப்பு புள்ளியியல் 2. உய்த்துணர்வு புள்ளியியல்.

**23.உய்த்துணர்வு புள்ளியியல் என்றால் என்ன ?**

கூறு(sample) வின் விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் பண்பினை அறிந்து கொள்வதன் மூலம் முழுத்தொகுப்பின் விவரங்களுக்கான பண்புகளை உய்த்துணர்வதற்கு பயன்படும் புள்ளியியலின் ஒரு பகுதி.

A.Alexis.DBHSS.V.Pet

**24.புள்ளி விவர வகைகள் யாவை ?**

**இயல்பின் அடிப்படையில்**

**1.**அளவு விவரங்கள் **2.** தன்மை விவரங்கள்

**ஆதாரத்தின் அடிப்படையில்**

**1.**முதல் நிலை விவரங்கள் **2.** இரண்டாம் நிலை விவரங்கள்

**25.உடன் தொடர்பு என்பதனை வரையறு.**

உடன் தொடர்பு பகுத்தாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன என்பதைப் பற்றி கணக்கிடுவது.

**26.ஒட்டுறவு என்பதனை வரையறு.**

ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம் மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும்.

**27. பொருளாதார அளவையியல் என்றால்என்ன ?**

பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்

**பகுதி–இ**

**27.புள்ளியியலின் பணிகள் யாவை ?**

புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.

இது பரந்த விவரங்களை சுருக்கி தருகிறது.

இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.

இது எடுகோள்களை உருவாக்கவும் சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.

இது மதிப்பீடுகளை செய்ய உதவுகிறது.

A.Alexis.DBHSS.V.Pet

**28.பல்வகையான உடன் தொடர்புகளை கூறி விளக்குக**

**1.மாறிகளுக்கு இடையான உறவின் திசையின் அடிப்படையில்.**

அ) நேர்மறை உடன் தொடர்பு ஆ) எதிர்மறை உடன் தொடர்பு.

**2.பகுப்பாய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்.**

அ) எளிய உடன் தொடர்பு ஆ) பன்முக உடன் தொடர்பு இ) பகுதி உடன் தொடர்பு

**3.மாறிகள் மாறும் விகிதத்தின் அடிப்படையில் வகைப்பாடு.**

அ) நேர்கோட்டு உடன் தொடர்பு ஆ) வளைகோட்டு உடன் தொடர்பு

**29.ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களை கூறுக.**

**1.**இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்க ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்படுகிறது.

**2.**இரு மாறிகளுக்கிடையே காரண விளைவை ஆராய்ந்து அவைகளுக்கிடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்த பயன்படுகிறது.

**3.**தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்கு சார்பு மாறியின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகம் செய்ய உதவுகிறது.

**30.பொருளாதார அளவையின் நோக்கங்களை கூறுக.**

**1.**பொருளாதார நடவடிக்கைகளை முன்னிறுத்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகிறது.

**2.**புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகிறது.

**3.**எடுகோள்களை சோதனை செய்யவும் முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.

**31. பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.**

**1.**கணித பொருளியலில் மாதிரிகள் பொருளாதா கோட்பாடுகளின்அடிப்படையில்உருவாக்கப்படுகிறது. ஆனால்பொருளாதார அளவையியல் மாதிரிகள் கோட்பாடுகளின் நம்பகதன்மையை அறிய புள்ளி விவரங்களின்அடிப்படையில் சோதனை செய்யப்படுகிறது.

**2.**புள்ளியியலின் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழை கருத்து இல்லை

ஆனால்பொருளாதாரஅளவையியல் மாதிரியில் பிழை கருத்து உள்ளடக்கியிருக்கிறது.

**32.இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி.**

**1.**புள்ளியியல் ஆதார அமைப்புகள் நாடு முழுவதிலும் நடைபெறும் புள்ளி விவர சேமிப்புகளை ஒருங்கினைத்து அவற்றை பரிசோதித்து தர மேம்பாட்டினை உறுதி செய்கிறது.

**2.**இவை தேசிய கணக்குகளை ஒருங்கினைப்பது ஆண்டு தொழில்துறை விசாரணையை நடத்துவது பொருளாதார விசாரணைகளை நடத்துவது தொழிற்சாலை உற்பத்தி விவரங்களை சேகாயீப்பது நுகர்வோர் குறியீட்டைண்ணை அமைப்பது ஆகும்.

**3.**மேலும் இவை மற்ற சமுதாய புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கு பயிற்சி பன்னாட்டு ஒத்துழைப்பை பேனுதல். தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகியவற்றிற்கு உதவி செய்கிறது.

**33. பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண். 14, 22, 9, 15, 20, 17, 12, 11**

**(வி டை: σ 4.18).**

| NO. | (X) | $x - \tilde{x}$ | $(x - \tilde{x})^2$ |
|---|---|---|---|
| 1 | 14 | 14-15 = -1 | 1 |
| 2 | 22 | 22 – 15 =7 | 49 |
| 3 | 9 | 9-15 = - 6 | 36 |
| 4 | 15 | 15-15 = 0 | 0 |
| 5 | 20 | 20-15 = 5 | 25 |
| 6 | 17 | 17-15 = 2 | 4 |
| 7 | 12 | 12 – 15 =- 3 | 9 |
| 8 | 11 | 11 – 15 = - 4 | 16 |
| N=8 | 120 | 14 – 14 =0 | 140 |

A.Alexis.BBHSS.V.Pet

$\tilde{x}$ **= 120 / 8 = 15**

திட்ட விலக்கம் **(σ)** $= \sqrt{\frac{\sum(x-\bar{x})^2}{n}}$

$= \sqrt{\frac{140}{8}} = \sqrt{17.5} =$ **(σ) = 4.18**

பகுதி–ஈ

**1. புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.**

**புள்ளியியலின் இயல்புகள்**

**1.** புள்ளியியலில் அறிவியல் கலையியல் ஆகிய இரண்டின் தன்மைகளும் கலந்திருக்கின்றன.

**2.** புள்ளியியல் விவரங்களை பகுத்தாய்ந்து அதன் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்கவும் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை சோதனை செய்து துல்லியமான முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது. எனவே புள்ளியியல் ஒரு அறிவியலாக பார்க்கப்படுகிறது.

**3.** மேலும் விவரங்களை திரட்டுவது அட்டவணையிடுவது முடிவுகளை எடுப்பது தீர்மானங்களை செய்வது என பல புள்ளி விவர நடவடிக்கைகளில் கலையியலின் உட்கூறுகள் கலந்துள்ளன.இந்த அடிப்படையில் இது ஒரு கலையியலாகவும் விளங்குகிறது.

**புள்ளியியலின் எல்லைகள்**

புள்ளியியலின் பரப்பு மிகவும் விரிந்ததாகும். மனிதனின் அனைத்து நடவடிக்கைகளிலும் இது பொதிந்துள்ளது.

**1.பொருளியலில் புள்ளியியல்**

பொருளியல் பிரச்சனைகள் தொடர்பான எண்ணற்ற ஆய்வுக்குரிய வினாக்களுக்கு விடை அறிய புள்ளி விவரங்கள் இன்றியமையாதவை.

**2.புள்ளியலும் வணிகமும்**

நடப்பு நிலைகளை புரிந்து கொள்ளவும் எதிர்கால போக்கினை உணர்ந்து கொள்ளவும் சந்தை ஆய்வுகள் முக்கிய பங்காற்றுகின்றன.

**3.புள்ளியியலும் திட்டமிடலும்**

திட்டமிடல் புள்ளியியலின் தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

**4. புள்ளியியலும் மருத்துவமும்**

மருத்துவ துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்திலும் புள்ளியியலின் பல்வேறு பகுதிகள் பயன்படுகின்றது.

**5. புள்ளியியலும் கல்வியியலும்**

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப புதிய கல்விக்கான தேவையை கண்டறிவதில் புள்ளியியல் மிகப்பெரிய பங்கினை வகிக்கிறது.

A.Alexis.DBHSS.V.Pet

www.Padasalai.Net www.CBSEtips.in

பதிவெண் : 1 2 3 8 0

# மாதாந்திரத் தேர்வு - 2019

**12–ம் வகுப்பு** **பொருளியல்** மதிப்பெண்கள் : 45

நேரம் : 1.15 மணி

## Part – I

**அனைத்துவினாக்களுக்கும் விடையளிக்கவும்**

**I. சரியானவிடையைஅதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்துஎழுதுக. 10 x 1 = 10**

1. மேக்ரோ என்றவார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?
   அ) ஆடம்ஸ்மித் ஆ) கீன்ஸ் இ) ராக்னர் ∴பிரிஸ் ஈ) காரல் மார்க்ஸ்
2. பேரியல் பொருளியலுடன் தொடர்பற்றதைகண்டுபிடி
   அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானகோட்பாடு
   இ) அங்காடிகோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு
3. கீழ்கண்டவற்றில் தவறான இணைஎது?
   அ) நவீனபேரியல் பொருளியலின் தந்தை - ஜே.எம்.கீன்ஸ்
   ஆ) சமதர்மபொருளியலின் தந்தை - சாமுவேல்சன்
   இ) முதலாளித்துவ பொருளியலின் தந்தை - ஆடம்ஸ்மித்
   ஈ) கலப்புபொருளாதாரம் - இந்தியா
4. ஒருகுறிப்பிட்டகாலத்தில் குவிந்தசரக்குகளின் அளவைகுறிப்பிடும் பதம்
   அ) உற்பத்தி ஆ) இருப்பு இ) மாறிலி ஈ) ஓட்டம்
5. Yஎன்பது …….. அ) C+I+G+(X-M) ஆ) C+I+G+(X+M)
   இ) C+I+G-(X+M) ஈ) C-I-G+(X-M)
6. மூன்றாம் துறை………..எனவும்அழைக்கப்படுகிறது
   அ) தொழில் ஆ) பணிகள் இ)வேளாண்மை ஈ) உற்பத்தி
7. ஒரு நாட்டின் நிதி ஆண்டு என்பது
   அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
   இ) ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 16 ஈ) ஜனவரி 1 முதல் ஏப்ரல் 31 வரை
8. முரண்பட்டதைதெரிவுசெய்க.
   அ) நுகர்வு ஆ) உற்பத்தி இ) விற்பனை ஈ) பரிமாற்றம்
9. கீழ்வரும் வாக்கியங்களைஆராய்க.
   கூற்று (A) முதன்மைத்துறைஎன்பதுவேளாண்மை
   காரணம் (R) பெருவாரியானமக்கள் வேளாண்மையைசார்ந்துள்ளனர்
   அ) (A) சரிஆனால் (R) தவறு
   ஆ) (A) தவறுஆனால் (R)சரி
   இ) (A) மற்றும் (R) இரண்டும் சரிமேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
   ஈ) (A) மற்றும் (R) இரண்டுமே சரிமேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. பொருந்தும்ஒன்றைகண்டுபிடி
    அ) MNP=GDP – தேய்மானகழிவு
    ஆ) NNP=GNP – தேய்மானகழிவு
    இ) NNP=GNP + தேய்மானம்
    ஈ) MNP=GDP / மக்கள் தொகை

## Part – II

**II. ஏதாவதுநான்குவினாக்களுக்குவிடையளி.** **4x2=8**

11. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
12. வருமானவட்டஓட்டம் என்றால் என்ன?
13. தேசியவருவாய் கணக்கீட்டில் சுய நுகர்வு எவ்வாறு சிரமத்தை தரகிறது?
14. நிகரநாட்டுஉற்பத்திக்கும் நிகரஉள்நாட்டுஉற்பத்திக்கும் இடையே உள்ளவேறுபாடுயாது?
15. சே விதியின் எடுகோள்களைபட்டியலிடுக.
16. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தை தருக

## Part-III

**III. ஏதாவதுநான்குவினாக்களுக்குவிடையளி.** **4x3=12**

17. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.
18. இருதுறை சுழல் ஓட்டமாதிரியை விளக்குக.
19. செலவின முறை பற்றி குறிப்பு வரைக.
20. தேசியவருவாயின் பயன்களைபட்டியலிடுக.
21. கீன்சின் கோட்பாட்டைதொடர் வரைபடம் மூலம் விளக்குக.
22. தொகுஅளிப்பைவரைபடம் மூலம் விளக்குக.

## Part – IV

**IV. அனைத்துவினாக்களுக்கும் விடையளி** **3x5=15**

23. பேரியல் பொருளாதாரத்தின் நோக்கங்களை விவாதி. **( அல்லது )**
    முதலாளித்துவம் சமத்துவம் கலப்புத்துவம் இவற்றின் பண்புகளை ஒப்பிடுக.
24. தேசியவருவாய் கணக்கிடும் முறைகளை விளக்குக. **(அல்லது)**
    நாட்டுவருமானம் கணக்கிடும் போது ஏற்படும் பிரச்சனைகளை விவரி.
25. வேலையின்மையின் வகைகளை விவரி. **(அல்லது)**
    ADF மற்றும் ASF-க்கு இடையிலான சமநிலையை வரைபடத்துடன் விளக்குக.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு எண் | | | | | | |

# மாதிரி காலாண்டுத் தேர்வு–2019–20

வகுப்பு 12 **பொருளியல்** காலம்:2.30
மதிப்பெண்கள்:90

## Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 x 1 = 20

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை
அ) சொத்து மற்றும் நலமும் ஆ) உற்பத்தி மற்றும் நுகர்வு இ) தேவையும் மற்றும் அளிப்பும்
ஈ). நுண்ணியல் மற்றும் பேரியல்

2. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ?
அ. முதலாளித்துவ அமைப்பு ஆ. சமத்துவ அமைப்பு இ. உலகமய அமைப்பு
ஈ. கலப்புப் பொருளாதார அமைப்பு

3. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது ?
அ. வருவாய் ஆ. வரி இ. செலவு ஈ. வருமானம்

4. . ___________ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலை வீத வருமானம் கண்டறியலாம்.
அ. உற்பத்தி ஆ. நாட்டின் மக்கள் தொகை இ. செலவு ஈ. GNP

5 PQLஐ என்பது ………….. ன் குறியீடு ஆகும்.
அ. பொருளாதார வளர்ச்சி ஆ. பொருளாதார நலன்
இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

6. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ……………
அ. விளைவு அளிப்பு பற்றாக் குறை ஆ. விளைவு தேவை பற்றாக்குறை
இ. இரண்டும் பற்றாக் குறை ஈ. எவையும் இல்லை

7. தொன்மைக் கோட்பாட்டின் படி, வட்டி வீதம் …………….. க்கான வெகுமதி
அ. முதலீடு ஆ. தேவை இ. மூலதனம் ஈ. சேமிப்பு

8. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் 100 ஆக இருந்தால்,
இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு ? அ) 0.8 ஆ) 800 இ) 810 ஈ) 0 .81

9. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு
அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு

10. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை
அ) குறைக்கிறது ஆ) உயர்த்துகிறது இ) மாற்றாது ஈ) மாற்றும்

11. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்.
அ) J. R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்

12 ஆர்பிஐ –ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூரு

13. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு
அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914

14. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம்
அதிகரிப்பது ………………….. பணவீக்கம் ஆகும்
அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்

15. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்
அ) உயர்ந்த பட்சமாக ஆ) மிக மோசமாக இ) மிக குறைந்த பட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்

16. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது
அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம் இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்

17. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது ?
அ) கடன் பணம் ஆ) முன்பணம் இ) கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ) கடன் பெறுதல்

18 . ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
அ) வணிக வங்கிகள் ரிசர்வ்வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அந்நிய செலாவணி விகிதம் ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

19. ஏற்றுமதி இறக்குமதி வங்கி துவங்கப்பட்ட து ?
அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே 1982 ஈ) மார்ச் 1982

20. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) வாஷிடங்டன் டி.சி ஆ) நியூயார்க் இ) வியன்னா ஈ) ஜெனிவா

A.Alexis DBHSS V.Pet

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வின ா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. பண வீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.
22. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது ?
23. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக
24. நுகர்வுச் சார்பு என்றால் என்ன ?
25. பெருக்கி – வரையறு
26. பண்டப்பணம் என்றால் என்ன ?
27 தேக்கவீக்கம் என்றால் என்ன ?
28. வணிக வங்கிகள் என்பதனை வரையறு.
29. பொது சந்தை வரையறு.
30. வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக
33. J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக
34. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
35. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?
36 வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.
37. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
38. வாணிபக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக
39. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக
40. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.

42. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி. (அல்லது)
தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?

43. வேலையின்மைகளின் வகைகளை விவரி (அல்லது)
தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

44. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி. (அல்லது)
பணத்தின் பணிகளை விளக்குக.

45. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக. (அல்லது)
இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

46. அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமின்மையின் வகைகளை விவரி. (அல்லது)
அயல் நாட்டுச் செலுத்து நிலையின் கூறுகளைஅட்டவணை வடிவில் விளக்குக.

47. பன்னாட்டுப் பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக. (அல்லது)
உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

A.Alexis.DBHSS.V.Pet

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

வகுப்பு 12 பதிவெண்

நேரம்: 2.30 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு: பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) "மேக்ரோ" என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம். கீன்ஸ் இ) ராகனர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

2) கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.
அ) பண அளிப்பு ஆ) சொத்துகள்
இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

3) எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு

4) தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளை கழித்தால் கிடைக்கும் வருமானம் .............. ஆகும்.
அ) பெயரளவு வருமானம் ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) உண்மை வருமானம் ஈ) தலா வருமானம்

5) வருமான முறை என்பது
அ) $y = w+r+i+\pi+(R-P)$ ஆ) $y = w+i+r+\pi+R-P$
இ) $y = w+r+\pi+i+R/P$ ஈ) $y = w+r+i+\pi+R\times P$

6) தொகுதேவை சமம்
அ) C+I+G ஆ) C+I+G+X-M இ) C+S+T+X-M ஈ) C+S+T+Rf

7) மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
அ) பூஜ்யம் ஆ) ஒன்று இ) இரண்டு ஈ) நேர்மறை

8) தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டிவீதம் ..............க்கான வெகுமதி.
அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு

9) தேசிய வருவாய் உயரும் போது
அ) APCயின் மதிப்பு குறைந்து சென்று MPCயின் மதிப்பை நெருங்கிவிடும்.
ஆ) APC உயர்ந்து MPCன் மதிப்பை விட்டு விலகிச்செல்லும்.
இ) APC மாறாமல் இருக்கும் ஈ) APC முடிவிலியை நெருங்கிச் செல்லும்

10) MPCஐயும் MPSஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1

11) பொருத்துக:
அ) MPS - 1. C+S
ஆ) K - 2. $\Delta I/\Delta C$
இ) Y - 3. $\Delta S/\Delta Y$
ஈ) β - 4. $\frac{1}{1-MPC}$
அ) 1 2 3 4 ஆ) 2 1 4 3 இ) 3 4 1 2 ஈ) 1 4 3 2

12) RBIயின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூரு

13) பணவீக்கம் என்பது
அ) விலைகள் அதிகரிப்பு ஆ) விலைகள் குறைத்தல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு ஈ) விலைகள் மாறாதிருத்தல்

14) வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு
இ) ஐ சி ஐ சி ஐ ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

15) நபார்டு வங்கி எப்பொழுது தொடங்கப்பட்டது?
அ) ஜூலை 1962 ஆ) ஜூலை 1972 இ) ஜூலை 1982 ஈ) ஜூலை 1992

www.Padasalai.Net www.CBSEtips.in



